தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென் தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

தென் தமிழகத்தின் ஓரிரு இடங்களில் வியாழக்கிழமை (ஜனவரி 9) மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: மன்னார் வளைகுடா பகுதியில் நிலை கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, மேற்கு நோக்கி நகர்ந்து தற்போது குமரிக் கடல் ஒட்டிய பகுதியில் நிலை கொண்டுள்ளது. இதனால் தென் தமிழகத்தில் ஒரு சில இடங்கள் மற்றும் வட தமிழகத்தில் ஆங்காங்கே வியாழக்கிழமை மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் புதன்கிழமை (ஜனவரி 8) காலை வரையிலான 24 மணி நேரத்தில் ராமேசுவரத்தில் 50 மி.மீ. மழை பெய்துள்ளது.

## மா சாகுபடியில் அதிக மகசூலுக்கு உயர் அடர்வு நடவு முறை



மா சாகுபடியில் புதிய தொழில்நுட்பமான உயர் அடர்வு நடவு முறையின் மூலம் குறைந்த இடத்தில் அதிக மகசூல் பெறலாம் என கிருஷ்ணகிரி மாவட்டம், எலுமிச்சங்கரி பெருமாள் வேளாண்மை அறிவியல் மையத்தின் ஒருங்கிணைப்பாளர் டி.சுந்தராஜ் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியது:

முக்கனியில் முதல் கனியான மாவானது தமிழகத்தில் தருமபுரி, திண்டுக்கல், சேலம், கிருஷ்ணகிரி மாவட்டங்களில் மானாவரியாகச் சாகுபடி செய்யப்படுகிறது.

உலக அளவில் மா உற்பத்தியில் 65 சதவீதம் நமது நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 45,000 ஹெக்டேர் பரப்பளவில் மா சாகுபடி செய்யப்படுகிறது. பொதுவாக மா சாகுபடியில், 10-க்கு 10 மீட்டர் இடைவெளியில் மாங்கன்றுகள் நடவு செய்யப்படுகின்றன. இவ்வாறு நடவு செய்வதன் மூலம் ஏக்கருக்கு 40 கன்றுகள் மட்டுமே நடவு செய்ய முடியும்.

புதிய தொழில்நுட்பமான உயர் அடர்வு நடவு முறையின் மூலம் 3-க்கு 2 மீ. இடைவெளியில் 674 மரக் கன்றுகளை நடவு செய்யலாம். உயர் அடர்வு நடவு முறை என்பது மரங்களுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைத்து, குறைந்த இடைவெளியில் அதிக மரக் கன்றுகளை நடவு செய்யும் முறை ஆகும்.

நிலம் தயார் செய்தல்: 1க்கு 1 மீட்டர் அளவில் குழி எடுத்து மேல் மண்ணுடன் 10 கிலோ நன்கு மக்கியத் தொழுஉரம், 100 கிராம் லிண்டோன் 1.3 சத பவுடரைக் கலந்து குழியில் இட வேண்டும். நடவுச்செடி தேர்வு: 1. நெருக்கி ஒட்டுச் செடிகள் (கட்டை விரல் பருமன், 4 அடி உயரம் கொண்ட ஒட்டுச் செடிகள்).

2. மென் தண்டு ஒட்டு (பென்சில் பருமன், குறைந்தது 2 - 2.5 அடி உயரம் கொண்ட ஒட்டுச் செடிகள்). ரகங்கள்: அல்போன்ஸா, ரத்னா பனேசான், அம்ரபாலி, மல்லிகா, பங்கனப்பள்ளி, மல்கோவா, ஹிமாயுதீன்.

நடவு முறை: ஒட்டுச் செடியின் ஒட்டுப் பகுதி தரையிலிருந்து 15 செ.மீ. உயரத்தில் இருக்குமாறு குழியின் நடுப்பகுதியில் செடியை நடவு செய்து காற்றில் ஆடாமல் இருக்க ஒரு குச்சியில் கட்ட வேண்டும்.

தண்ணீர் பாய்ச்சல்: மரக் கன்றுகள் நன்கு வளர்ச்சி அடையும் வரை தினமும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். சொட்டு நீர் பாசனம் என்றால் மரம் ஒன்றுக்கு 30 முதல் 50 லிட்டர் தண்ணீர் தினமும் பாய்ச்சலாம். ஆன்லைன் மூலம் என்றால், 16 எம்எம் ரேட்லர் மூலம் 48 லிட்டர் தண்ணீர் பாய்ச்சலாம்.

உர நிர்வாகம்: 10 கிலோ தொழு உரத்துடன் யூரியா 450 கிராம், சூப்பர் பாஸ்பேட் 1.250 கிலோவும், பொட்டாஷ் 400 கிராமும் இட வேண்டும். 5 ஆண்டுகளுக்குப் பிறகு 50 கிலோ தொழு உரத்துடன் யூரியா 2 கிலோவும், சூப்பர் பாஸ்பேட் 6 கிலோவும், பொட்டாஷ் 2.5 கிலோவும் இட வேண்டும்.

பயிர் பாதுகாப்பு

முதல் மருந்து தெளித்தல்: பூ மொட்டு விரிவதற்கு முன்பு தாக்கும் தத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த மோனோ குரோட்டாபாஸ், கார்பரில் மருந்துகளில் ஏதேனும் ஒன்றையும், அத்துடன் தோன்றும் சாம்பல், கரும் பூசணம் நோயைக் கட்டுப்படுத்த நனையும் கந்தகம், தலோயனைட் மீத்தைல், டிரைடிமெர்பான் இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்க வேண்டும்.

இரண்டாம் மருந்து தெளிப்பு: பிஞ்சுகள் பட்டாணி அளவில் இருக்கும் போது தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சியான தத்துப் பூச்சி, மாவுப் பூச்சி, இலை பிணைப்பு பூச்சிகளைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் மருந்தையும், மொட்டுக் கருகல், பறவைக் கண் நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த, டிரைடிமார்ப், கார்பங்டசிம், எக்சாகோனசோல், மேன்கோசெப் இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்க வேண்டும். மூன்றாம் மருந்து தெளிப்பு: பிஞ்சுகள் முக்கால் அளவில் இருக்கும் போது, நன்கு வளரும் தருணத்தில் இருக்கும் காய்களை தாக்கும் மாங்கொட்டை வண்டு, பழ ஈ ஆகியவற்றைக் கட்டுப்படுத்த மாலத்தியான், டி.டி.வி.பி. இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்க வேண்டும். அல்லது மீத்தைல் யூஜினால் கலந்த ஈர்ப்பு பொறி வைப்பதன் மூலமும் கட்டுப்படுத்தலாம்.

அறுவடைக்கு முன்பும், பின்பும் தோன்றும் பழ அழுகல் நோயை 50 கிராம் கார்பன்டசிம் 50 ஜ்ல் 500 கிராம் மொலாஸஸ் 20 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

மகசூல்: சாதாரண நடவு முறையில் ஏக்கருக்கு 4 முதல் 5 டன் வரை மகசூல் பெறலாம். இந்த நவீன முறையில் ஏக்கருக்கு 12 முதல் 13 டன் வரையில் மகசூல் பெறலாம். மேலும், குறுகிய கால ஊடு பயிராக பப்பாளி, மாதுளை, அன்னாசி,

சக்கரை வள்ளிக் கிழங்கு, கொண்டை கடலை, துவரை, பாசிப் பயறு, வேர்கடலை, தக்காளி, வெங்காயம், வெண்டை, கத்திரி, மிளகாய் ஆகிய பயிர்களையும் 3 ஆண்டுகள் வரை ஊடுபயிராகச் சாகுபடி செய்யலாம் என்றார் அவர்.

உயர் அடர்வு நடவு முறையில் சாகுபடி செய்யப்பட்ட மாங்கன்றுகள்.

**இலை உறைக் கருகலில் இருந்து நெற்பயிரைப் பாதுகாக்க...**



நெற்பயிரில் காணப்படும் இலை உறைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்தும் முறைகளைப் பின்பற்றுமாறு விவசாயிகளுக்கு வேளாண்துறை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தாமிரவருணி பாசனத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் பிசான பருவ சாகுபடி சுமார் 46,000 ஹெக்டேரில் நெல் பயிர் நடவு செய்யப்பட்டு, தற்போது களை எடுக்கும் பருவத்தில் உள்ளது.

இதனிடையே இலை உறைக் கருகல் நோய் தாக்காமல் நெற்பயிரைக் கட்டுப்படுத்தும் முறைகளை வேளாண்துறை அறிவித்துள்ளது.திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வேளாண் உதவி இயக்குநர் சை.சுந்தரம், வேளாண் அலுவலர் செ.பரத்வாஜ் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

அம்பாசமுத்திரம் வட்டாரத்தில் வாகைக்குளம், பிரம்மதேசம், மன்னார்கோவில், சிவந்திபுரம், விக்கிரமசிங்கபுரம் பகுதியில் நெல் பயிரில் இலை உறைக் கருகல் நோய் பரவலாக ஆங்காங்கே காணப்படுகிறது. இந்நோயை விவசாயிகள் கட்டுப்படுத்த கீழ்கண்ட முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

நோய் பரவும் காரணிகள்: வயல் வெளிகளிலும், சுற்றுப்புறங்களிலும் நிரந்தரமாகக் காணப்படும் புல் மற்றும் களைச் செடிகளில் இருந்து இந்த நோய் எளிதில் நெல் பயிருக்கு பரவுகிறது. மேலும் இந்நோய் மண் மூலமாகவும், அதிகமான ஈரப்பதம் காரணமாகவும், மிதமான வெப்பம் இருக்கும் சூழல் மற்றும் பாசன நீர் மூலம் அடுத்த வயல்களுக்கும் பரவும் தன்மை கொண்டது.

நோயின் அறிகுறிகள்: நோயின் தாக்குதல் முதலில் நீரின் மேற்பகுதியில் உள்ள இலை உறையின் ஓரங்களில் காணப்படும். இலைகளில் முட்டை வடிவத்தில் சாம்பல் பச்சை நிறத்தில் புள்ளிகள் காணப்படும். பின்பு அவை வெண்ணிறப் புள்ளிகளாய் மாறும். மேலும் தாக்கப்பட்ட பகுதிகளில் பழுப்பு நிற கடுகு போன்ற பூஞ்சாண விதைகளைக் காணலாம். இப் புள்ளிகள் ஒன்றாக இணைந்து படை படையாகத் தென்படும். இலைகளின் பெரும்பகுதி தாக்கப்படும்போது இலை கரிந்து மடிந்து விடும்.

கட்டுபடுத்தும் முறைகள்: வயல்வெளிகள், சுற்றுப்புறங்களில் புல் மற்றும் களைச் செடிகள் இல்லாதவாறு சுத்தமாக பார்த்துக் கொள்ள வேண்டும். சதுர நடவு (திருந்திய நெல் சாகுபடி) மேற்கொள்வதன் மூலம் இந்நோய் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

தழைச்சத்து உரங்களை சமமாகப் பிரித்து இட வேண்டும். நோய் தாக்கிய வயலில் இருந்து அடுத்த வயலுக்கு நீர் பாய்ச்சக் கூடாது. டிரைக்கோடெர்மா விரிடி என்ற இயற்கை ஒட்டுண்ணிகளின் வளர்ச்சியையும் இனப்பெருக்கத்தையும், ஊக்குவிக்கும் வகையில் நிலத்திற்கு அதிக அளவில் இயற்கை தழைச் சத்து உரங்களை இட வேண்டும்.

பூச்சிக்கொல்லி மருந்து சிகிச்சை: இந்த நோயை நன்கு கட்டுப்படுத்தக் கூடிய கார்பன்டாசிம் (50 டபுள்பி) என்ற பூசணக் கொல்லி மருந்தை ஏக்கருக்கு 200 கிராம் என்ற அளவில் நடவு செய்த 45 முதல் 50 நாள்களுக்குப் பிறகு, அல்லது நோய் பாதிப்பு தென்பட்ட உடனும் மீண்டும் 15 முதல் நாள்கள் இடைவெளியில் 200 லிட்டர் நீரில் கலந்து பயிரின் அடிப்பாகத்தில் உள்ள இலை உறைகள் மற்றும் தண்டுப்பகுதி நன்கு நனையும் வகையில் 2 முதல் 3 முறை தெளிக்க வேண்டும்.

அல்லது ஏக்கருக்கு ஹெக்சோகோனசோல் 5 சதவிகிதம் இசி 500 மில்லி அல்லது புரோப்பிகோனசோல் 25 சதவிகிதம் இசி 200 மில்லி என்ற அளவில் நோய் தோன்றிய உடன் தெளிக்க வேண்டும். அல்லது அசோசிஸ்டிரோபின் என்ற பூசணக் கொல்லி மருந்தை 200 மிலி என்ற அளவில் தெளித்தும் கட்டுப்படுத்தலாம் என்றனர் அவர்கள்.

### திருப்பாச்சேத்தியில் கரும்பு விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4000 வழங்கக் கோரி தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருப்பாச்சேத்தியைச் சுற்றி 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் கரும்பு விவசாயம் செய்யப்படுகிறது. கடந்த சில ஆண்டுகளாக மத்திய, மாநில அரசுகளால் கரும்புக்கு நிர்ணயிக்கப்படும் விலை மிகவும் குறைவாக உள்ளதால் விவசாயிகள் கவலையடைந்து வருகின்றனர்.

கரும்புக்கு கூடுதல் விலை வழங்கக் கோரி திருப்பாச்சேத்தி, கல்லூரணி, வேம்பத்தூர், படமாத்தூர், மாரநாடு, தூதை, பச்சேரி மற்றும் அதனை சுற்றியுள்ள 50க்கும் மேற்பட்ட கிராம விவசாயிகள், தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் காதில் பூ சுற்றிக் கொண்டு செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் எம்.சக்திவேல் தலைமை வகித்தார். மாவட்ட விவசாய தொழிலாளர் சங்கச் செயலர் ஆர்.கே.தண்டியப்பன் துவக்கி வைத்தார்

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு விவசாய சங்க மாவட்டச் செயலர் கே.வீரபாண்டி பேசும்போது, மத்திய அரசு கடந்த ஆண்டு ஒரு டன் கரும்பிற்கு ரூ.1700 அறிவித்தது. மாநில அரசு ரூ.650 கூடுதல் விலையாக அறிவித்தது. இந்த ஆண்டு மத்திய அரசு ஒரு டன் கரும்பிற்கு ரூ.2100 அறிவித்துள்ளது. ஆனால் தமிழக அரசு கடந்த ஆண்டை விட ரூ.100 குறைத்து ரூ.550 என அறிவித்துள்ளது.

இதனால் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மத்திய-மாநில அரசுகள் ஒரு டன் கரும்பிற்கு ரூ.4000 என அறிவிக்க வேண்டும். விவசாயிகளிடம் வங்கிக்

கடனுக்காக பல ஆண்டுகளாக பிடித்த ரூ.40 கோடி பணத்தை சர்க்கரை ஆலை வங்கியில் செலுத்தவேண்டும் அனைத்து ஆலைகளிலும் எத்தனால் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

ஆர்ப்பாட்டத்தில் கரும்பு விவசாயிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## இளையான்குடி வேளாண்மைத் துறைக்கு புதிய கட்டடம்: திமுக கோரிக்கை

சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில் இடிந்து விழும் நிலையில் உள்ள வேளாண்மைத் துறை அலுவலகத்துக்கு புதிய கட்டடம் கட்டும் பணியை உடனே தொடங்க வேண்டும் என திமுக சார்பில் அரசுக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இது குறித்து கட்சியின் இளையான்குடி ஒன்றியச் செயலரான முன்னாள் எம்.எல்.ஏ. சுப. மதியசரன் தெரிவித்துள்ளதாவது: இளையான்குடியில் வேளாண்மைத் துறை அலுவலகத்தின் கட்டடம் மிகவும் பழுதடைந்து எப்போது இடிந்து விழும் என்ற நிலையில் உள்ளது. இதனால் இங்கு பணியாற்றும் ஊழியர்கள் அச்சத்துடன் பணி செய்து வருகின்றனர்.

இந்த அலுவலகத்துக்கு பொதுமக்களும் வர அச்சப்படுகின்றனர். கடந்த திமுக ஆட்சியில் இங்கு கிட்டங்கி வசதியுடன் வேளாண்மைத் துறை அலுவலகத்துக்கு புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டவுடன் கட்டடம் கட்டும் பணி நடைபெறாமல் கிடப்பில் போடப்பட்டு விட்டது. எனவே மாவட்ட நிர்வாகம் உடன் நடவடிக்கை எடுத்து இளையான்குடியில் வேளாண்மைத் துறை அலுவலகத்துக்கு கிட்டங்கி வசதியுடன் புதிய கட்டடம் கட்ட திமுக வலியுறுத்துகிறது என்றார்.

## வேளாண் இடுபொருள் வழங்கல்

தண்டராம்பட்டு வட்டாரத்தில் வேளாண்மைத்துறையின் சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் வேளாண்துறை சார்ந்த கால்நடை வளர்ப்புக்கான தீவனப்புல் விதை அடங்கிய பைகள் புதன்கிழமை தண்டராம்பட்டு வட்டார வேளாண்மைத்துறை அலுவலகத்தில் வழங்கப்பட்டது.

தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) ஜெகநாதன், தண்டராம்பட்டு வேளாண்மை உதவி இயக்குநர் எ.பாலா, தொழில்நுட்ப மேலாளர், வல்லுநர்கள் ஆகியோர் கால்நடை வளர்ப்புக்கு தீவனப்புல் விதை செயல் விளக்க தளம் அமைக்க தீவனப்புல் விதை அடங்கிய பைகளை பயனாளிகளுக்கு வழங்கினர் .

## குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வெளிநடப்பு

கரும்பு விலை உயர்வு ஏமாற்றம் அளிப்பதாகக் கூறி, திருவண்ணாமலையில் நடைபெற்ற தாலுகா அளவிலான குறைதீர் கூட்டத்தைப் புறக்கணித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், செவ்வாய்க்கிழமை தாலுகா அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு, கோட்டாட்சியர் கோ.முத்துக்குமாரசாமி தலைமை வகித்தார். வட்டாட்சியர் வேடியப்பன், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் காமராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பேசிய விவசாயிகள், புதிய குடும்ப அட்டை கேட்டு 2010-ல் கொடுத்த மனு மீது இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால், ரூ.1000 கொடுத்தால் உடனடியாக ரேஷன் கார்டு கிடைக்கிறது. இதுபோன்ற முறைகேடுகளைக் கண்காணிக்க வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் ரேஷன் கார்டுகளை வழங்க வேண்டும் என்றனர்.

தொடர்ந்து, கரும்பு விலையை உயர்த்திய தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்து விவசாயி ஒருவர் பேசினார். அப்போது குறுக்கிட்டுப் பேசிய தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கரும்பு விலை உயர்வு விவசாயிகளுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவே இருக்கிறது. எனவே, வெளிநடப்பு செய்கிறோம் என்று கூறிவிட்டு வெளிநடப்பு செய்தனர். தொடர்ந்து, வட்டாட்சியர் அலுவலகம் எதிரே கரும்புப் பயிருடன் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். செங்கத்தில்...

செங்கத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) ஆர்.மல்லிகா தலைமை வகித்தார். வட்டாட்சியர் ராஜலட்சுமி வரவேற்றார். கூட்டத்தில் விவசாயிகள் கலந்துகொண்டு பேசியதாவது:

செங்கம் நகரில் உள்ள துக்காப்பேட்டை, தளவாநாய்க்கன்பேட்டை, திருவள்ளுவர் நகரில் உள்ள குளங்களை தூர்வாரி சரி செய்ய வேண்டும், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் மூலம் கடந்த 2010 முதல் 2012 வரை அரசு வழங்கிய போனஸ் தொகை இதுவரை வழங்கப்படாமல் உள்ளது. அதை விவசாயிகளுக்கு உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். நீர் நிலை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைளை வலியுறுத்தி விவசாயிகள் பேசினர்.

சமூகப் பாதுகாப்பு வட்டாட்சியர் முருகன், வட்ட வழங்கல் அலுவலர் நித்யானந்தம் உள்பட அரசு அதிகாரிகள், விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

செய்யாறில்... செய்யாறில் விவசாயிகள் சங்கம் சார்பில் கரும்புக்கு மதிப்பூட்டு விலையை அறிவிக்கக் கோரி கரும்பு காவடி எடுத்து நூதன ஆர்ப்பாட்டத்தைச் செய்ததுடன், வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி விவசாய குறைதீர் கூட்டத்தில் வெளிநடப்பு செய்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற நூதன ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வாக்கடை புருஷோத்தமன் தலைமை தாங்க, வட்டார ஒருங்கிணைப்பாளர் எஸ்.ரகுபதி முன்னிலை வகித்தார்.

கேஸ், பெட்ரோல், டீசல் விலை உயர்வை 50 சதவீதம் கட்டுப்படுத்தி, 150 கிலோ சர்க்கரை முழுவதும் மலிவு விலையில் வழங்க வேண்டும் என வலியுறுத்தி கரும்புக் காவடியை எடுத்துச் சென்றனர்.

வெளிநடப்பு

செய்யாறு கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு கோட்டாட்சியர் எஸ்.சாந்தா தலைமைத் தாங்கினார். கூட்டத்தில் பங்கேற்க வந்த விவசாயிகள் ஒட்டு மொத்தமாக வெளிநடப்பு செய்தனர்.

அப்போது விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கக் கோரியும், கரும்புக்கு மதிப்பூட்டிய விலையை நிர்ணயிக்கக் கோரி வெளிநடப்பு செய்வதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**தக்காளி விலை வீழ்ச்சி: விவசாயிகள் வேதனை**

ஊத்தங்கரை பகுதியில் தக்காளி விளைச்சல் அதிகரித்த போதும் விலை வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை சுற்றுப் பகுதிகளான ஆனந்தூர், கல்லாவி, அனுமன்தீர்த்தம், பாவக்கல், சிங்காரப்பேட்டை, பெரியதள்ளப்பாடி, மாரம்பட்டி, கோவிந்தாபுரம், காரப்பட்டு, குன்னத்தூர், சாமல்பட்டி பகுதிகளில் 300 ஏக்கருக்கு மேல் விவசாயிகள் தக்காளி பயிரிட்டுள்ளனர். இந்தப் பகுதி விவசாயிகள் ஊத்தங்கரை சந்தைக்கு தக்காளியை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். கடந்த சில வாரங்களுக்கு முன்பு 1 கிலோ ரூ.30 முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது உற்பத்தி அதிகரிப்பால் விலை திடீரென சரிந்து 1 கிலோ தக்காளி 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால், தக்காளி பயிரிட்ட விவசாயிகள் பெரும் வேதனையடைந்துள்ளனர்.

ஊத்தங்கரை அருகேயுள்ள கொண்டம்பட்டிபுதூரைச் சேர்ந்த விவசாயி மணிவண்ணன் கூறியது: பருவ மழை போதியளவு பெய்யாத நிலையிலும், கிணற்று நீரை நம்பி 2 ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்தேன். கடந்த சில வாரங்களாக 1 கிலோ ரூ.20 வரை விற்பனையானது. தற்போது திடீரென ரூ. 3-ஆக வீழ்ச்சியடைந்ததால், தக்காளியை செடிகளிலிருந்து பறிப்பதற்கான கூலி கூட கொடுக்க முடியாது. இதனால், செடிகளில் தக்காளியை பறிக்காமலே விட்டுள்ளோம். இந்த முறை தக்காளி பயிரிட்டதால், ரூ.50 ஆயிரம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது என்றார்.

**காடையாம்பட்டி விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பப் பயிற்சி**

காடையாம்பட்டி வட்டாரத்தில் "அட்மா' திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புதிய தொழில்நுட்பங்கள் கண்டுணர்வு சுற்றுலாவில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

காடையாம்பட்டி வட்டாரத்தில் இரு வருவாய்க் கிராமங்களுக்கு ஒருவர் வீதம் உழவர் நண்பர்களாக பணிபுரியம் முன்னோடி விவசாயிகளுக்கு வேளாண்மைச் சார்ந்த தொழில்நுட்பங்களை நேரில் சென்று அறிந்து கொள்ளும் வகையில்

ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்டுணர்வு சுற்றுலாவில் சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிற்சியளிக்கப்பட்டது.

திருந்திய நெல்சாகுபடி, காளான் வளர்ப்பு, மா, சப்போட்டா வீரிய ஒட்டு, மண்புழு வளர்ப்பு, தீவனப்புல் வளர்ப்பு, சிறுதானியங்கள் சாகுபடி ஆகிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

தானியங்கி வானிலை மையத்தில் வெப்பநிலை, மழையளவு, காற்றின் ஈரப்பதம் ஆகியவற்றை தகுந்த கருவிகளைக் கொண்டு கணக்கிடும் முறை குறித்தும் கோனாவீடர், சிறுதானியங்களைச் சுத்தப்படுத்தும் கருவிகள், வயல்களைச் சமன்படுத்தும் கருவிகள் ஆகிய வேளாண் கருவிகளை பயன்படுத்துவது பற்றியும் பயிற்சியளிக்கப்பட்டது.

வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் கு.மகேந்திரகுமார் தலைமையில் பண்ணை மேலாளர் காயத்ரி விவசாயிகளுக்கு பயிற்சியளித்தார்.

அப்போது "அட்மா' திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.ராஜேந்திரன்,தொழில்நுட்ப வல்லுநர் சிவக்குமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

**கருகும் நெல் பயிரைக் காப்பாற்ற கால்வாயில் தண்ணீர் திறக்க வேண்டும்**

சேலம் மாவட்டம், மேட்டூர் பகுதியில் தண்ணீர் பற்றாக்குறையால் கருகும் நெல் பயிரைக் காப்பாற்ற கிழக்கு, மேற்குக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று மேட்டூர் சுற்றுப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து மேட்டூர் அருகேயுள்ள கோல்நாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்த ஆர்.மாதையன் உள்ளிட்ட விவசாயிகள், நெல் பயிர்களுடன் வந்து சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை அளித்த மனுவில் கூறியிருப்பது:

மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்குக் கால்வாய்களில் ஆண்டுதோறும் பாசனத்துக்காக தண்ணீர் திறந்தவிடப்படுகிறது. இந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி கோல்நாயக்கன்பட்டி, சாணாவூர், மணக்காடு, காட்டூர், பொறையூர், தெற்கத்திக்காடு, கூடக்கல், குப்பனூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 500 ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது.

இந்த நிலையில், கிழக்கு, மேற்குக் கால்வாயில் தண்ணீர் திறந்துவிடுவது கடந்த மாதம் 31-ஆம் தேதியுடன் நிறுத்தப்பட்டது. நெல் பயிர் அறுவடைக்கு மேலும் சில நாள்களுக்கு தண்ணீர் தேவைப்படுகிறது. தண்ணீர் இல்லாததால் நெல் பயிர்கள் வாடி வதங்கி வருகின்றன. இதனால், விவசாயிகளுக்கு பெரிய அளவில் இழப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, மேட்டூர் அணையின் கிழக்கு, மேற்குக் கால்வாய்களில் மேலும் 10 நாள்களுக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் செய்தியாளர்களிடம் கூறியது:

சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் உள்ள சுமார் 45 ஆயிரம் ஏக்கர் பாசன நிலத்துக்காக மேட்டூர் கிழக்கு, மேற்குக் கால்வாயில் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் டிசம்பர் 15-ஆம் தேதி வரையிலும் தண்ணீர் திறந்துவிடப்படும். நிகழாண்டு பாசனத்துக்காக கடந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இந்தத் தண்ணீர் கடந்த 31-ஆம் தேதியுடன் நிறுத்தப்பட்டுள்ளது. நெல் பயிர்களில் கதிர் முற்றும் நிலை உள்ளதால், பாசனத்துக்காகக் கூடுதலாக தண்ணீர் தேவைப்படுகிறது. அடுத்த 6 நாள்களுக்கு தண்ணீர் கிடைத்தால் கூட கருகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள பயிர்களைக் காப்பாற்றிவிட முடியும் என்றனர் அவர்கள்.

**பருத்தியில் வெள்ளை ஈ, தத்துப் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை**

பருத்தியில் வெள்ளை ஈ மற்றும் தத்துப் பூச்சிகளின் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை தெரிவித்துள்ளார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் பி. வெங்கடேசன்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் நிகழாண்டு 31,600 ஹெக்டேர் பரப்பளவில் மானாவாரி பயிராக பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் தாக்கிய இலைப்பேன்கள் மற்றும் ஆல்டர் நேரியா இலைக்கருகல் நோயினால்,

ஏறக்குறைய 50% பருத்தி பயிர்கள் பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்பட்டது. தற்போது, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகளை உரிய நேரத்தில் மேற்கொண்டதன் பயனாக, பருத்தி பயிர்கள் மீண்டும் துளிர்விட்டு 10 முதல் 60 சப்பைகள் வரை காணப்படுகிறது. இந்தத் தருணத்தில், பருத்தி செடிகளில் வெள்ளை ஈக்கள், தத்துப் பூச்சிகளின் தாக்குதல் கண்டறியப்பட்டுள்ளது. பச்சை தத்துப் பூச்சிகளின் தாக்குதலால், பருத்தி இலைகளின் ஓரங்கள் வெளிர் மஞ்சள் நிறமாக, பின்னோக்கி வளைந்து காணப்படும். பிறகு, நெருப்பில் எரிந்தது போன்று இலைகள் சிவப்பாக மாறி கொட்டிவிடும்.

வெள்ளை ஈக்களின் தாக்குதலினால், பருத்தி இலைகள் தடிமனாக மாறுவதோடு நிறமிழந்து காணப்படுகின்றன. இவை பருத்தி செடிகளின் இலைகளிலிருந்து சாற்றை உறிஞ்சுவதே காரணம். மேலும், ஒருசில பகுதிகளில் மீரிட் நாவாய் பூச்சியின் தாக்குதலால் சப்பைகள் பழுப்பு அல்லது கருமை நிற புள்ளிகளுடன் கொட்டுகின்றன. இவற்றின் அதிக தாக்குதலுக்கு முக்கிய காரணமாக, ஒரே வகையான பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துதல், தொடர்ந்து வறண்ட வானிலை, காற்றில் குறைந்த ஈரப்பதமாகும்.

வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த, ஓர் ஏக்கருக்கு 4 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டுப் பொறிகளை வைத்து கட்டுப்படுத்தலாம். மேலும், சாறு உறிஞ்சும் பூச்சிகளின் அதிக தாக்குதலின் போது ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளான தயாமித்தாக்சிம் 4 கிராம் அல்லது பிப்ரோனில் 10 மில்லி அல்லது அசிபேட் 20 கிராம் அல்லது அசிடமாபிரைடு 10 கிராம் இவற்றில் ஏதாவது ஒன்றை 10 லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி ஒட்டும் திரவம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

மேலும் விவரங்களுக்கு, வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை, பூச்சி தாக்கிய பருத்தி இலைகளுடன் நேரில் அணுகி ஆலோசனை பெற்று, மேலாண்மை முறைகளை கடைபிடித்து சாறு உறிஞ்சும் பூச்சிகளினால் ஏற்படும் சேதத்தை கட்டுப்படுத்தி பருத்தியில் அதிக மகசூல் பெறலாம்.

இன்றைய வேளாண் செய்திகள்

முசுமுசுக்கை (சுக்கை)


இம் மூலிகையின் பெயர் சுக்கை என்கிற முசுமுசுக்கை. சித்தர்கள் இதனை ""ஆஞ்சநேயர் கை" என்றழைத்தனர். இதன் இலை காசம், கோழை, சுவாசக் கோளாறுகள், புகைக்கம்மல், ஜலதோஷம் ஆகியவற்றை போக்கும் தன்மையுடையது. பித்தம் அதிகமாவதால் ஏற்படும் இறைப்பு (வீசிங்) கட்டுப்படும். இது செம்மண் பூமி மற்றும் கரும்புத் தோட்டங்களில் வளரும். பனிக் காலத்தில் ஏற்படும் சுவாசக் கோளாறுகளையும் நீக்கும் தன்மை உடையது. தலை சுற்றலையும் போக்கும். வல்லாரை கீரையைப் போன்று ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்து மூளையை பலப்படுத்தும். இதன் இலையைப் பறித்து லேசாக இடித்து ரசம் வைத்து தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட பக்கவாதம், பித்த நோய்களைப் போக்கும். இதன் இலையை நிழலில் உலர்த்தி பொடி செய்து ரசப்பொடி போன்று பயன்படுத்தலாம் (புளி சேர்க்காமல் ரசம் வைக்க வேண்டும்). இதில் சுண்ணாம்புச் சத்து அதிகம் இருப்பதால் எலும்புகள் பலம் பெறும். சித்தர்கள் இதனை ""ஆஞ்சநேயர் கை" என்று அழைத்ததில் இருந்தே இதன் மருத்துவ மகிமையை நாம் அறிந்து கொள்ள முடியும். இதுவும் ஒருவித ""சஞ்சீவிக் கீரை" ஆகும். பி.வி.கனகராஜன், உடுமலை. செல்: 96594 56279

## நவீன தொழில்நுட்பம்



மரம் சார்ந்த ஒப்பந்தமுறை சாகுபடி: ஒப்பந்தமுறை சாகுபடி விவசாயத்துறையிலும், தோட்டக்கலைத்துறையிலும் அறிமுகப்படுத்தப்பட்டு மிகப்பெருமளவில் வெற்றியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் தொழிற்சாலை சார்ந்த மர ஒப்பந்தமுறை சாகுபடி அறிமுக அளவிலேயே இருந்து வந்தது. வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் காகிதம் மற்றும் தீக்குச்சி மரங்களின் உயர்ரக மரங்களை கண்டறிந்து அவற்றை சான்றாக உருவாக்கி வருகின்றன. அவற்றை தொழிற்சாலைகளுடன் இணைந்து மாதிரி தோட்டங்களை உருவாக்கியுள்ளது. அதன் பலனாக உழவர்கள் அதிக அளவில் ஒப்பந்தமுறை சாகுபடியில் ஈர்க்கப்பட்டு சுமார் 40,000 ஏக்கர் நிலப்பரப்பில் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் சுமார் 29 மாவட்டங்களில் குறு, பெரு உழவர்கள் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.
மரம் சார்ந்த ஒப்பந்தமுறை சாகுபடியில் 4 விதமான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளனர். உழவர்களும், தொண்டு நிறுவனங்களும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண் மற்றும் பண்ணைக்காடுகள் திட்டம்: இத்திட்டத்தின் மூலம் உழவர்கள் பயன் பெறலாம் (1 ஏக்கர் வரை). இத்திட்டத்தில் நிலமேம்பாடு, சீர்திருத்தம், மரவளர்ப்பு, மரமேலாண்மை, மர அறுவடை வரை உள்ள அனைத்து செயல்முறைகளும் உழவர்களே தங்கள் செலவில் செய்து முடிக்க வேண்டும். இத்திட்டத்தில் கனறக பெருக்க முறையில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான நாற்றுகளை மானிய விலையில் உழவர்களுக்கு தொழிற்சாலைகள் மூலம் வழங்கப்படும். தொழில்நுட்பங்களை வனக்கல்லூரி அறிவியலர் விவசாயிகளின் நிலங்களுக்கு நேரடியாக சென்று வழங்கி வருகின்றார்கள். மரங்கள் முதிர்ந்த

காலத்தில் தொழிற்சாலைகள் தங்கள் சொந்த செலவில் மரங்களை வெட்டி மரங்களுக்கு குறைந்தபட்ச ஆதாரநிலையாக ரூ.2500 முதல் 7500 வரை (மரம் சார்ந்த தொழில் நிறுவனங்களைப் பொருத்து) ஒரு டன்னுக்கு அல்லது அறுவடை காலத்தின் பொழுது சந்தை விலையில் கிடைக்கும்.

மூலதனக்காடுகள்: இத்திட்டம் மரம் சார்ந்த தொழிற்சாலைகளுக்கு தேவையான தரமான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வதற்கான திட்டமாகும். இந்த திட்டத்தில் வருவாய் பங்கீட்டுத் திட்டம், குத்தகை சாகுபடித் திட்டம் என இரண்டு திட்டங்கள் வெற்றிகரமாக அமல்படுத்தப்பட்டு தொழிற்சாலைகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வருவாய் பங்கீட்டுத் திட்டம்: இத்திட்டத்தில் பங்குபெற குறைந்தது 25 ஏக்கர் நிலவரப்படி ஒரே இடத்தில் பெற்றிருக்க வேண்டும். ஒப்பந்தம் செய்யும் தொழிற்சாலைகளின் நிலமேம்பாடு நெல் அறுவடை வரை உள்ள அனைத்து செலவினங்களையும் ஏற்றுக்கொண்டு மரங்கள் அறுவடை செய்த பின்னும் கிடைக்கும் பருவ நில உரிமையாளர்களுக்கு பங்கீட்டு கொடுக்கின்றது. நீர் ஆதாரம் உள்ள இடங்களுக்கு 40 சதவீதமும், மானாவாரி இடங்களுக்கு 30 சதவீதமும் நில உரிமையாளர்களுக்கு வருவாய் பங்கீடாக வழங்கப்படுகிறது.

குத்தகை சாகுபடி: இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் நிலங்களை மரம் சார்ந்த தொழில் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கி மரவளர்ப்பில் ஈடுபடலாம். நீர் ஆதாரம் உள்ள இடங்களுக்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.3000/- மானாவாரி நாட்களுக்கு ரூ.1000/-மும் வழங்கப்படும். குறைந்த ஒப்பந்தமுறை காலமாக சுமார் 6 ஆண்டுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தமுறை சாகுபடி: வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் மரம் சார்ந்த தொழில் நிறுவனங்களுடன் இணைந்து ஒப்பந்த மர சாகுபடி முறையை அறிமுகப்படுத்தி வருகின்றது. இவ்வாறு மரப்பயிர்களில் ஒப்பந்தமுறை சாகுபடிக்கு நிறுவனங்களைத் தொடர்புக் கொண்டு பயன்பெறலாம். வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம் -641 301. போன்: 04254 - 271 502., மரக்கூழ் மர ஒப்பந்த முறை சாகுபடி - போன்: 94425 91411., தீக்குச்சி மர ஒப்பந்தமுறை சாகுபடி - போன்: 93455 24401.,

உயிர் எரிசக்தி மர ஒப்பந்தமுறை சாகுபடி - போன்: 96000 67896., பிளைவுட் மர ஒப்பந்தமுறை சாகுபடி - போன்: 94430 35177. (தகவல்: முனைவர் பெ.துரைராசு முதன்மை வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.கழகம், மேட்டுப்பாளையம் - 641 301. போன்: 04254 - 222 010).

"புதினாவின்' மருத்துவ பலன்கள்



புதினாவின் தாவரப் பெயர், "மென்தா அர்வேன்சிஸ்'. இது "லாமினேசியே' குடும்பத்தைச் சேர்ந்தது. இது உலகம் முழுவதும் உணவு, மருந்து, அழகு பராமரிப்பிற்காக பயன்படுத்தப்படுகிறது. இக்கீரை "மின்ட்' என்றும், புதியன் மூலி, ஈயெச்சக்கீரை என்றும் அழைக்கப்படுகிறது.

புதினாவில் 40 வகைகள் உள்ளன. வயல் புதினா, கார்ன் புதினா, ஜப்பானிய புதினா, கோசி, பெப்பர்மின்ட் புதினா உட்பட ஏராளமானவை உள்ளன.

புதினாவில் உயிர்ச்சத்துக்கள் ஏ,பி, சி, யுடன் துத்தநாகம், கந்தகம், மாங்கனீஸ், இரும்பு, பொட்டாசியம், சுண்ணாம்புச்சத்து, நார்ச்சத்து, புரதம் மற்றும் நீர் அடங்கியுள்ளது. இதில் உள்ள "ஆன்டி ஆக்ஸிடென்ட்' பெருங்குடல் புற்றுநோயை தீர்க்கும்.

புதினாவின் துளிர் இலைகளின் காரமும், சுவையும் அசைவ உணவுகளான பிரியாணி, கட்லெட், ஜீரா ரைஸ், குருமா, புலாவ் உணவுகளுக்கு மணமும், ருசியும் அதிகம் தருகிறது. இட்லி, தோசை, போண்டா, சமோசா, பஜ்ஜி, வடைகளுக்கு தொட்டுக் கொள்ள "சட்னி'யை தருகிறது. புதினா இலைகளை சேர்த்து தேநீர், பழரசங்கள் தயாரிக்கலாம். புதினாவை தவிர மற்ற கீரைகள், காய்கறிகளுடன் சேர்த்து பொரியல் செய்யலாம். புதினா பல நோய்களுக்கு அருமருந்தாகிறது. பத்து புதினா இலைகளைக் கழுவித் தின்றாலோ அல்லது இலைகளை கொதிக்க வைத்து,

ஆறிய நீரை அருந்தினாலோ அஜீரணம், வயிற்று பொருமல், வாயுத்தொல்லை, மலச்சிக்கல், உப்புசம், வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு நோய்கள் அகலும். வயிற்றுப் பசி உண்டாகும்.

இதன் தண்டுகளும், இலைகளும் கொதிக்க வைத்த நீரில் தேன், எலுமிச்சைச் சாறு பிழிந்து இரவிலும், அதிகாலையிலும் குடித்துவர, வயிற்றில் உள்ள கிருமிகள், புழுக்கள், வயிற்றுவலி, காய்ச்சல், நீர்க்கடுப்பு அகலும். புதினாத் துவையல் வாந்தி, குமட்டலை தீர்க்கும். புதினாவுடன் எலுமிச்சை ஜூஸ் சேர்த்த தேநீர் குடித்தால் நன்கு ஜீரணமாகும்.

ஒரு வயது குழந்தைக்கு சிறிதளவு புதினாச்சாறு கொடுத்தால் வயிற்று பிரச்னை தீரும். இஞ்சி, புதினாவை அரைத்து நீரில் கொதிக்க வைத்து அருந்த வாந்தி குறையும். நெஞ்சு எரிச்சல், இருமல், வாய்நாற்றம் தீரும். இதுபோல வியக்கத்தகுந்த மருத்துவ பலன்களைத் தரும் புதினா கீரையை வயல்களிலும், தோட்டங்களிலும், இல்லங்களி லும் வளர்த்து பயன்பெறலாம்.

**கி.ராஜேந்திரன், மேலூர்.**

மேலூாரில் கருகும் நெற்பயிர்கள் தண்ணீர் திறக்க ஐகோர்ட் உத்தரவு

மதுரை:மதுரை மாவட்டம் மேலூர் பகுதியில் கருகும் ஒருபோக சாகுபடி பயிர்களை காப்பாற்ற, வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்க ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது.

மேலூர் திருமேனி, அமலன் தாக்கல் செய்த பொது

நல மனுக்கள்: நாங்கள் முல்லைப் பெரியாறு அணையின், பழமையான ஆயக்கட்டு பாசன விவசாயிகள். ஒருபோக சாகுபடிக்கு 80 நாட்கள் தண்ணீர் தேவை; 49 நாட்கள் தண்ணீர் வழங்கினர். பயிர்கள் கருகுகின்றன. மேலூர் ஒருபோக சாகுபடிக்கு, வைகையிலிருந்து 5 நாட்கள் தண்ணீர் திறக்க அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலூர் கிருஷ்ணமூர்த்தி,'மதுரை வடக்கு மற்றும் மேலூர் தாலுகாவிற்கு தண்ணீர் திறக்க உத்தரவிட வேண்டும்,' என மனு தாக்கல் செய்தார்.

எதிர்மனுதாரர்களாக இணைத்துக்கொண்ட பி.டி.ராஜன் மற்றும் தந்தை பெரியார் கால்வாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் ஜெயராமன் உட்பட 3 பேர்,'

தண்ணீர் திறந்தால் கம்பம் பள்ளத்தாக்கில் இருபோக சாகுபடி, ஒருபோகமாக மாறிவிடும். இதில் கோர்ட் எவ்வித உத்தரவும் பிறப்பிக்க, அதிகாரம் இல்லை,' என மனு தாக்கல் செய்தனர்.

திருமேனி தாக்கல் செய்த மற்றொரு மனு:

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் பொதுப்பணி,

விவசாயத்துறை அதிகாரிகளின் அவசரக் கூட்டம் ஜன.,4 ல் நடத்த வேண்டும். முல்லைப் பெரியாறு, வைகை அணைகளின் நீர் இருப்பு அளவை பொறுத்து, அதை விவசாயம், குடிநீர் தேவைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என முடிவு செய்ய வேண்டும் என ஜன.,3 ல் ஐகோர்ட்

உத்தரவிட்டது.

தலைமைச் செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் கூட்டம் நடத்தவில்லை. கோர்ட் உத்தரவை அவமதித்ததாக, அவர் மீது நடவடிக்கை எடுக்க

உத்தரவிட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார்.

நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி கொண்ட பெஞ்ச் முன், நேற்று மனுக்கள் விசாரணைக்கு வந்தன.

திருமேனி சார்பில் வக்கீல் பீட்டர் ரமேஷ்குமார், கிருஷ்ணமூர்த்தி சார்பில் மகேந்திரன் ஆஜராகினர். நீதிபதிகள்:பெரியாறு வைகை வடிநில கோட்ட செயற்பொறியாளர் 2013 டிச.,12 ல் மதுரை கலெக்டருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில், 'இதில் பெரியாறு வைகை பாசன திட்டக்குழுவினர் ஒரு மனு அனுப்பினர். அதை இத்துடன் இணைத்துள்ளேன்.

பெரியாறு ஒருபோக சாகுபடிக்கு, வைகை அணையிலிருந்து தண்ணீர் திறக்க போதுமான நீர் இருப்பு இல்லை. ஆனால், கூடுதலாக

தண்ணீர் திறக்க வலியுறுத்துகின்றனர்.வைகைஅணை யில்(டிச.,12) மொத்த நீர் இருப்பு 1257 மில்லியன் கன அடி உள்ளது. இதில் பெரியாறு பங்கீட்டு நீர் 522 மி.க.,அடி, வைகை பங்கீட்டு நீர் 735 மி.க., அடி அடங்கும். வைகை அணையில் உள்ள, வைகை பங்கீட்டு நீரில் 700 மி.க.,அடியை, பற்று முறையில் பெரியாறு பாசனத்திற்கு வழங்கலாம்.

வரும் காலங்களில் வைகை அணைக்கு வந்து சேரும்

பெரியாறு பங்கீட்டு நீரில் ஈடு செய்து கொள்ளலாம்' என உள்ளது.தண்ணீர் திறக்க வலியுறுத்தி மேலூர் பகுதியில் விவசாயிகள் போராட்டம் நடத்தியுள்ளனர். அப்போது 415 மி.க.,அடி நீர் திறக்கப்பட்டுள்ளது.
செயற்பொறியாளர், கலெக்டருக்கு எழுதிய கடித்தில் 'வைகை அணையில் உள்ள வைகை பங்கீட்டு நீரில் 700 மி.க.,அடியை, பெரியாறு பாசனத்திற்கு வழங்கலாம்,' என தெரிவித்துள்ளார். இதில் ஏற்கனவே வழங்கிய 415 மி.க.,அடிபோக, மீதி நீரை (285 மி.க.,அடி) அணையிலிருந்து திறந்துவிட வேண்டும்.
நிர்வாகக் காரணங்களுக்காக, ஜன.,4 ல் ஆலோசனைக் கூட்டம் நடத்த முடியவில்லை என்ற, தலைமைச் செயலாளரின் விளக்கத்தை ஏற்று, அவர் மீதான அவமதிப்பு வழக்கு முடிக்கப்படுகிறது என்றனர்.

## மாடுகளை பாதுகாக்க வழக்கு கலெக்டருக்கு ஐகோர்ட் உத்தரவு

மதுரை:கேரளாவிற்கு சட்டவிரோதமாக கொண்டு செல்ல முயன்று, கம்பத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ள மாடுகளை பாதுகாக்க நடவடிக்கை கோரிய வழக்கில், தேனி கலெக்டர் அறிக்கை தாக்கல் செய்ய, மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது. பெங்களூரு பிராணிகள் நல கவுரவ அலுவலர் ஜோஷின் ஆண்டனி தாக்கல் செய்த பொதுநல மனு: தமிழகத்தில் கோமாரி நோய் தாக்குதலால் ஆடு, மாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், கேரளாவிற்கு அவற்றை கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. சிலர், லாரிகள் மூலம் சட்டவிரோதமாக கொண்டு சென்ற 2000 மாடுகளை கம்பம் பகுதியில் அடைத்து வைத்துள்ளனர். நாங்கள் ஆய்வு செய்யச் சென்றோம். மாடுகளை அடைத்து வைத்துள்ள, கும்பல் எங்கள் மீது தாக்குதல் நடத்தியது. கம்பம் போலீசார் வழக்குப் பதிவு செய்தனர். மாடுகளுக்கு சரியான உணவு, குடிநீர் வழங்கவில்லை. மின் கம்பங்களில் கட்டி வைத்துள்ளனர். பல பசுமாடுகள் கருவுற்றுள்ளன.
சட்டவிரோதமாக சிலர் கட்டுப்பாட்டிலுள்ள மாடுகளை மீட்டு, அவற்றிற்கு உணவு, தண்ணீர் வழங்க தேனி கலெக்டர், எஸ்.பி.,க்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு குறிப்பிட்டார். நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி கொண்ட பெஞ்ச் முன், மனு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் வக்கீல் ஜி.ஆர்.சாமிநாதன் ஆஜரானார். தேனி கலெக்டர் ஜன.,9 ல் அறிக்கை தாக்கல் செய்ய, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

**மழையால் அழுகிய பேசாளை மீன்கள் அ0 டன் வீண்: ரூ.கூ லட்சம் நஷ்டம்**

ராமேஸ்வரம்:ராமேஸ்வரத்தில் பெய்த மழையால், கருவாடுக்காக காய வைக்கப்பட்ட 80 டன் பேசாளை மீன்களில், மணி ஈக்கள், புழுக்கள் உருவாகி அழுகின. வியாபாரிகளுக்கு ஆறரை லட்ச ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ராமேஸ்வரத்தில் தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலையால் பிடித்த 200 டன் பேசாளை மீன்களை, வியாபாரிகள் கிலோ 8 ரூபாய்க்கு வாங்கினர். இந்த மீனில் இருந்து எண்ணெய் எடுக்க, தூத்துக்குடி வியாபாரிகள் வாங்கியது போக, மீதமுள்ள 80 டன் மீன்களை, ராமேஸ்வரம் வியாபாரிகள் வாங்கினர். கோழி தீவனத்திற்காக உலர்த்தி வைத்திருந்தனர். ஜன.,6ம் தேதி முதல் ராமேஸ்வரத்தில் பெய்த தொடர் மழையால், பேசாளை மீன்களில், மணி ஈக்கள் உருவாகின.
மீன்கள் அழுகி துர்நாற்றம் வீசியது. மர்ம காய்ச்சலை பரப்பும் அபாயம் உள்ளதால், நகராட்சி நிர்வாகம் மருந்து தெளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
ராமேஸ்வரம் கருவாடு வியாபாரிகள் சிலர் கூறியதாவது: ரூ.6.40 லட்சத்துக்கு வாங்கிய 80 டன் பேசாளை மீன்கள், வெயிலில் உலர வைக்க இரு நாட்கள் ஆகும். காய வைப்போருக்கு கூலி 2 லட்ச ரூபாய். தற்போது பெய்து வரும் மழையால் மீன்கள் அழுகி நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ பேசாளை மீன்களை உலர வைத்தால், 600 கிராம் கருவாடு கிடைக்கும். மழையால் பேசாளையில் புழுக்கள் உருவாகி, முள் மட்டுமே மிஞ்சும். இதை குழி தோண்டி புதைப்பதை தவிர, வேறு வழியில்லை, என்றனர்.

**"கைக்கு எட்டியது; வாய்க்கு எட்டுமா' காசோலையாக வேண்டும் காப்பீடு தொகை விவசாயிகள் வலியுறுத்தல்**

திருவாடானை:பயிர் காப்பீடு தொகை வழங்குவதில் முறைகேடு நடக்க வாய்ப்பிருப்பதால், காசோலையாக வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.
ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்தாண்டு விளைச்சல் பாதிப்பை தொடர்ந்து, விவசாயிகளுக்கு ரூ.144 கோடி, பயிர் இன்ஸ்சூரன்ஸ் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இத்தொகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு

சங்கங்களுக்கும், பிரித்து வழங்கப்பட்டுள்ளது. சில ஆண்டுகளாகவே கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர் காப்பீடு தொகை, ரொக்கமாக வழங்கபட்டபோது பல முறைகேடுகள் நடந்தது. பிடித்தம் என்ற பெயரில் குறிப்பிட்ட தொகையை எடுத்து கொண்டு, மீதியை வழங்கியதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர்.

விவசாயிகள் சிலர் கூறும்போது: கடன் வாங்கியும், நகைகளை அடகு வைத்தும், விவசாயம் செய்து வருகிறோம். விளைச்சல் பாதிக்கப்படும் போது, பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. பயிர் காப்பீடு தொகை ஒரளவு மகிழ்ச்சியை தந்தாலும், முழுமையாக கைக்கு வராதது ஏமாற்றத்தை அளிக்கிறது. டெபாசிட்டில் வரவு வைப்பது, சேமிப்பு கணக்கில் பிடித்தம் செய்வது, கடனில் வரவு வைத்து விடுகின்றனர். இது தவிர சில கூட்டுறவு சங்கங்களில், "கமிஷன்' என்ற பெயரில் ஒரு தொகையை பிடித்தம் செய்கின்றனர். குறைந்த தொகையே வழங்குகின்றனர், என்றனர்.

இன்னும் சில நாட்களில் பட்டுவாடா துவங்க இருப்பதால், முறைகேட்டை தடுக்க, கலெக்டர் நந்தகுமார், காசோலையாக வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### பருத்தி, மக்காசோளம் பயிர்கள் அறுவடை பணியில் "சிக்கல்'

சின்னசேலம்: சின்னசேலம் பகுதிகளில் பருத்தி, மக்காசோளம் <உள்ளிட்ட பயிர்களை அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் பரிதவிக்கின்றனர்.சின்னசேலம் தாலுகாவில் உள்ள உலகங்காத்தான், தெங்கியாநத்தம், பங்காரம், நமச்சிவாயபுரம் உள்ளிட்ட கிராமங்களில் மானவாரி மற்றும் இரவை முறையிலும் பருத்தி, மக்காசோளம் ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.மக்கா சோளம் பயிரிடப்பட்டு, மூன்று மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது. பருத்தி சாகுபடி செய்யப்பட்டு, பஞ்சு எடுக்கும் பணியை செய்து வருகின்றனர்.இந்த பயிர்களை அறுவடை செய்கின்றபோது மழை இருக்க கூடாது. அதிகமான வெயில் தேவை. இதேபோன்ற சீதோஷ்ண நிலையில்தான், அறுவடை செய்த பின், விளைபொருட்களை உலர்த்த முடியும்.சின்னசேலம் பகுதியில் நேற்று மேகமூட்டம் சூழ்ந்து, லேசான மழை பெய்தது. இதனால் பருத்தி, மக்காசோள பயிர்களை அறுவடை செய்து, உலர்த்த முடியாமல் விவசாயிகள் அவதிப்பட்டனர்.

## கால்நடை தீவன பற்றாக்குறை சமாளிக்க சேலத்தில் ஐந்து தீவன கிடங்கு அமைப்பு

மேட்டூர்: நடப்பாண்டு வறட்சியால் கால்நடைகளுக்கு ஏற்படும் தீவன பற்றாக்குறை சமாளிக்க, கால்நடைத்துறை சார்பில், சேலம் மாவட்டத்தில், ஐந்து இடங்களில் தீவன கிடங்கு அமைக்கப்பட்டு, மானிய விலையில் தீவனம் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பால் உற்பத்தியில், சேலம் மாவட்டம் மாநிலத்தில் முன்னணி இடத்தை வகிக்கிறது.கடந்த ஆண்டு பருவமழை தவறியதால், மாவட்டம் முழுவதும் கோடைகாலத்தில் நீடித்த வறட்சியால் தீவன பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால், பெரும்பாலான விவசாயிகள், தங்கள் கால்நடைகளை குறைந்த விலைக்கும், நஷ்டத்துக்கும் விற்பனை செய்தனர். மேலும், ஒரு மாதத்துக்கு முன், சேலம் மாவட்டத்தில், கோமாரி நோய்க்கு, 200க்கும் மேற்பட்ட கால்நடைகள் பலியாகி விட்டது. இதனால், சேலம் மாவட்டத்தில் பால் உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டது. இந்நிலையில், நடப்பாண்டும் சேலம் மாவட்டத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை மிக குறைவாக பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் வறட்சி நீடிப்பதால், கால்நடைகளுக்கான தீவனங்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது. வரும் கோடையில், தீவன பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் அபாயம் இருப்பதால், அதை சமாளிக்க கால்நடைத்துறை, சேலம் மாவட்டத்தில், முதன்முறையாக, ஐந்து இடங்களில் தீவன கிடங்கு அமைக்க முடிவு செய்தது. அதன்படி சேலம் மாவட்டத்தில், கால்நடைகள் அதிகம் காணப்படும் நங்கவள்ளி, மேச்சேரி, கொங்கணாபுரம், நரசோதிப்பட்டி, தலைவாசல் ஆகிய ஐந்து இடங்களில் கால்நடைத்துறை சார்பில் தீவனகிடங்கும் அமைக்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் தற்போது சம்பா நெல் சாகுபடி அறுவடை துவங்கியது. கால்நடைத்துறை சார்பில் டெல்டா மாவட்டங்களில் இருந்து வைக்கோல் கொள்முதல் செய்து, சேலம் மாவட்டத்தில் உள்ள, ஐந்து தீவன கிடங்குகளிலும் இருப்பு வைத்து, கால்நடை விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இதுகுறித்து கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

டெல்டா மாவட்டங்களில் இருந்து வைக்கோல் கொள்முதல் செய்து, சேலம்

மாவட்ட தீவன கிடங்குகளிலும் இருப்பு வைக்க ஒரு கிலோவுக்கு, 10 ரூபாய் வரை செலவாகும். எனினும், அரசு சார்பில் மானியத்தில், ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய் வீதம், ஒரு மாட்டுக்கு, தினசரி, மூன்று கிலோ தீவனம் வழங்கப்படவுள்ளது. ஒரு மாட்டுக்கு, ஒரு வாரத்துக்கு தேவையான, 21 கிலோ தீவனம் மொத்தமாக வழங்கப்படும். சேலம் மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள தீவன பற்றாக்குறை சமாளிக்க, வரும் மார்ச் மாதம் வரை, தீவன கிடங்கும் மூலம் விவசாயிகளுக்கு தீவனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. தேவையை பொருத்து மேலும் இரு மாதம் காலநீடிப்பு செய்யவும் வாய்ப்புள்ளது. ஒரு விவசாயி தங்களிடம் எத்தனை மாடு உள்ளது என்பதற்காக கால்நடைத்துறை மருத்துவர் சான்றிதழ் பெற வேண்டும். அந்த சான்றிதழுடன், தீவன கிடங்குக்கு வரும் விவசாயிகளுக்கு, தேவையான தீவனம் மானிய விலையில் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## மேட்டூர் அணை நீர் திறப்பு குறைப்பு

மேட்டூர்: வினாடிக்கு, 9,000 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை, டெல்டா நீர்திறப்பு வினாடிக்கு, 6,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.

கடந்த ஆக.,2முதல், டெல்டா பாசனத்துக்கு தொடர்ச்சியாக நீர்திறக்கப்பட்டதால், கடந்த டிசம்பர், 1ம் தேதி, 85.110 அடியாக இருந்த அணை நீர்மட்டம் மளமளவென சரிய துவங்கியது.நேற்று அணை நீர்மட்டம், 60.650 அடியாகவும், நீர் இருப்பு, 25.174 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. கடந்த, 38 நாளில் அணை நீர்மட்டம், 25 அடியும், நீர் இருப்பு, 22 டி.எம்.சி.,யும் சரிந்தது. அணையின் நீர்வரத்தும் நேற்று வினாடிக்கு, 445 கனஅடியாக சரிந்தது. நீர்வரத்து குறைந்து, நீர்திறப்பு அதிகரித்ததால், சில நாட்களாக மேட்டூர் அணை நீர்மட்டம் மளமளவென சரிந்து வருகிறது. இதனால், வினாடிக்கு, 9,000 கனஅடியாக இருந்த, மேட்டூர் அணை டெல்டா நீர்திறப்பு நேற்று வினாடிக்கு, 6,000 கனஅடியாக குறைக்கப்பட்டது.

## குறைந்த சாகுபடி செலவில் அதிக லாபம் மக்காச்சோளம் பயிரிட விவசாயிகள் ஆர்வம்

நாமக்கல்: அதிக லாபம் தருவதுடன், சாகுபடி செலவும் குறைவால், குறுகிய காலப்பயிரான மக்காச்சோளம் சாகுபடியை, விவசாயிகள் ஆர்வமுடன் மேற்கொண்டுள்ளனர்.

கால்நடை தீவனமாக பயன்படுத்தப்படும் மக்காச்சோளம், மகாராஷ்டிரா, கர்நாடகா போன்ற மாநிலங்களில் இருந்து, அதிக அளவில் கொள்முதல் செய்யப்படுகிறது. நாமக்கல் மாவட்டத்தில், மக்காச்சோளம் பயிர் சாகுபடி குறைந்ததற்கு வறட்சியே காரணம்.

கடந்த, 2010-11ல் நாமக்கல் மாவட்டத்தில் மக்காச்சோளம் சாகுபடி, 15 ஆயிரம் முதல், 18 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு வரை மேற்கொள்ளப்பட்டது. கடந்த, இரண்டு ஆண்டுகளில், பருவமழை பொய்த்தது, வறட்சி காரணமாக தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. அதனால், கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இந்நிலையில், நடப்பு ஆண்டு, ஓரளவுக்கு பருவமழை பொழிந்தது. மேலும், காவிரி நீர்ப்பிடிப்பு குதிகளில் கனமழை பொழிந்ததால், மேட்டூர் அணை நிரம்பியது. அதை தொடர்ந்து, பாசனத்துக்காக தேவையான அளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அவற்றை பயன்படுத்தி, நாமக்கல் மாவட்டத்தில், மல்லசமுத்திரம், ராசிபுரம், வெண்ணந்தூர், எலச்சிப்பாளையம் ஆகிய யூனியன் பகுதியில், அதிக அளவு மக்காச்சோளம் சாகுபடி செய்துள்ளனர்.

குறுகிய காலப்பயிர் (110 நாள்) என்பதால், அதிகம் பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். மேலும், தண்ணீர் குறைந்த அளவே தேவைப்படும். அதே போல், சாகுபடி செலவும் குறைவு. மற்ற பயிர்களை போல், பூச்சித் தாக்குதல் மக்காச்சோளப்பயிரில் அதிகம் இல்லை. அதிக லாபம் கிடைக்கக்கூடிய பயிராக, மக்காச்சோளம் விளங்குகிறது. நன்கு விளைந்த மக்காச்சோளத்தின் மூலம், ஒரு ஏக்கருக்கு, இரண்டரை முதல், மூன்று டன் வரை உற்பத்தி செய்யலாம். சொட்டு நீர் பாசனம் மூலமும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண் உதவி இயக்குனர் ஒருவர் கூறியதாவது:

குறைந்த காலப்பயிரான மக்காச்சோளப்பயிர், நாமக்கல் மாவட்டத்தில், 9,000

ஹெக்டேர் அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வழக்கத்தை விட, 30 சதவீதம் மழை அளவு குறைந்துள்ளதால், கூடுதலாக பயிர் சாகுபடி செய்யவில்லை. 2010-11ம் ஆண்டில், 18 ஆயிரம் ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி செய்யப்பட்டிருந்தது. வறட்சி காரணமாக, இந்த ஆண்டு சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது. வறட்சியிலும் ஒரு புரட்சியாக, மக்காச்சோள மகசூலை ஆர்வமுடன் விவசாயிகள் பயிரிடலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## மானிய விலையில் வைக்கோல் திட்டம்: விவசாயிகள் அதிருப்தி

குஜிலியம்பாறை:தமிழக அரசு, மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டத்தில், குஜிலியம்பாறை ஒன்றியத்திற்கு ஆயிரம் பேர்களுக்கு மட்டுமே டோக்கன் வழங்குவதால், ஏராளமானோர் தீவனம் கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் கடும் வறட்சியை கருத்தில் கொண்டு, குஜிலியம்பாறை, வேடசந்தூர், தேவத்தூர், வத்தலக்குண்டு, கோபால்பட்டி ஆகிய இடங்களில் கால்நடைகளுக்கான வைக்கோல், மானிய விலையில் வழங்கப்படுமென அரசு அறிவித்தது. சம்பந்தப்பட்ட ஒன்றியத்தில் கால்நடை வளர்ப்போர், அங்குள்ள கால்நடை மருந்தகத்தில் பெயரை பதிவு செய்து, அடையாள அட்டை பெற்றுள்ளனர். ஒருவருக்கு கிலோ ரூ.2க்கு,105 கிலோ வைக்கோல் வழங்கப்படும். ஒரு கால்நடை மருத்தகத்திற்கு உட்பட்ட பகுதியில், 200 விவசாயிகளுக்கு மட்டுமே வைக்கோல் வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குஜிலியம்பாறை ஒன்றியத்தில், குஜிலியம்பாறை, கூடலூர், கூம்பூர், ஆர்.வெள்ளோடு, பல்லாநத்தம் ஆகிய ஐந்து இடங்களில் தான் கால்நடை மருந்தகங்கள் உள்ளன. இதில் இருந்து ஆயிரம் விவசாயிகளுக்கு மட்டுமே வைக்கோல் வழங்கப்பட உள்ளது. டி.கூடலூர் ஊராட்சியில், ஆயிரம் பேர் பதிவு செய்ய காத்திருந்தும், 200 பேருக்கு தான், வைக்கோல் வழங்க, டோக்கன் வழங்கியுள்ளனர். தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க மாவட்ட தலைவர் ராஜரத்தினம் கூறுகையில் ,"" குஜிலியம்பாறை ஒன்றியத்தில் 40 ஆயிரம் கால்நடைகள் உள்ளன. தொடர்ந்து கடும் வறட்சி நிலவுவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகள் நலன் கருதி, கூடுதலான வைக்கோல் சப்ளை செய்ய அரசு முன்வர வேண்டும்," என்றார்.

## இயற்கை முறை விவசாயத்தில்சங்கராபுரம் விவசாயிகள் ஆர்வம்

சங்கராபுரம்: சங்கராபுரம் பகுதியில் இயற்கை முறையில் விவசாயம் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.கடந்த 15,20 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்தில் இயற்கை முறையில் தழைகள், செடிகள் பயன்படுத்தப்பட்டு வந்தது. இதனால் விவசாய பயிர்கள் நன்கு செழித்து வளர்ந்தன. காலப் போக்கில் ரசாயன உரங்களை விவசாயிகள் பயன்படுத்த ஆரம்பித்தனர். இதனால் பொதுமக்களுக்கு பல்வேறு நோய் பாதிப்புகள் ஏற்பட துவங்கியது. உடல் பாதிப்புகளும் ஏற்பட்டது. இவற்றை சமாளிக்கும் வகையில் இயற்கை முறையிலான விவசாய விளைபொருட்கள் உற்பத்திக்கு, தற்போது முக்கித்துவம் கிடைத்து வருகிறது.சங்கராபுரம் பகுதியில் தற்போது விவசாயிகள் இயற்கை முறையில் விவசாயம் செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். நெல் நடவு செய்வதற்கு முன்பு வேம்பு, எருக்கு போன்ற இலைகளை(தழைகளை) பயன்படுத்தி விவசாயப் பணிகளை துவக்கி வருகின்றனர்.

## பருத்தி செடிகளை பாதுகாக்ககழிகளை கட்டி பராமரிப்பு

தியாகதுருகம்: ஒட்டு ரக பருத்தி செடிகள் மண்ணில் சாய்ந்துமகசூல் பாதிக்காத வகையில் கழிகளை கட்டி விவசாயிகள் பராமரித்து வருகின்றனர்.

தியாகதுருகம் பகுதியில் 7,000 ஏக்கர் பரப்பில் மானாவாரி பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதேபோல் வீரிய ஒட்டு ரக பருத்தி 1,000 ஏக்கரில் பயிரிட்டுள்ளனர். இது பராமரிப்பு செய்வதில் பல சிரமம் உள்ளது.பூக்கும் பருவத்தில் ஆண், பெண் பூக்களை இனம் கண்டறிந்து செயற்கை மகரந்த சேர்க்கை செய்யப்படுகிறது. இதனால் அதிக காய்கள் உருவாகி கூடுதல் பலன் தருகிறது. இவ்வகை பருத்தி பஞ்சு அதிக விலைக்கு விற்பனையாகிறது. இந்த ரக செடிகள் உயரமாக வளர்கின்றன. இதனால் பஞ்சு வெடிக்கும் தருணத்தில் காய்களின் பாரம் தாங்காமல் செடிகள் மண்ணில் சாய்ந்து விடுகின்றன. இது மகசூலை பாதிக்கும் என்பதால், வரப்புகளின் ஓரம் கழிகளை நட்டு இடையே கம்பிகள் மூலம் செடிகள் சாய்ந்து விடாமல் கட்டி வைத்து பராமரிக்கின்றனர்.இதனால் செடிகள் மண்ணில் சாய்ந்து பஞ்சு வீணாகாமல் பாதுகாக்கப்படுகிறது. வீரிய ஒட்டு ரக பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களில் ஏராளமான கழிகள் நடப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்கு கூடுதல் செலவை ஏற்படுத்தியுள்ளது.

## புதிய முறையில் கரும்பு வெட்டதொழிலாளிகளுக்கு பயிற்சி

விழுப்புரம்: முண்டியம்பாக்கம் ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலை சார்பில், புதிய முறையில் கரும்பு வெட்டும் சிறப்பு பயிற்சி, கொசப்பாளையத்தில் நடந்தது.கரும்பு அலுவலர் குமணன் தலைமை தாங்கினார். கரும்பு ஆய்வாளர்கள் வாசுதேவன், மகேஷ் ஆகியோர் தொழிலாளிகளுக்கு பயிற்சி அளித்தனர். இதில் கரும்பில், தோகைகள் முழுவதும் நீக்கும் வகையில், எதிர்கத்தி போட்டு கரும்பு வெட்டும் பயிற்சி அளிக்கப்பட்டது.இம்முறையில் கரும்பின் நுனிப்பகுதியிலிருந்து, அடிப்பகுதி நோக்கி கத்தியால், சோலையை நீக்கும் முறை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. கரும்பு அறுவடையின் போது நுனிக்கரும்புகளை (கொழுத்தாடைகள்) வீணாக்காமல், பார்களில் உள்ள கட்டை கரும்பில் பழுதுபார்த்து போடவும் அறிவுரை வழங்கப்பட்டது. கரும்புத் துறை பொதுமேலாளர் ங்கரலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியில்ஒரே நாளில் 4,000 நெல் மூட்டைகள் குவிந்தன

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டிக்கு நேற்று 4,000 நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. உளுந்து விலை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.உளுந்தூர்பேட்டை மார்க்கெட் கமிட்டியில் கடந்த 6ம் தேதி அதிகளவாக 6,200 நெல் மூட்டைகளும், 650 மக்காசோளம் மூட்டைகள் மற்றும் 150 வரகு மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. பொன்னி நெல் அதிகபட்சமாக 1415 ரூபாய், குறைந்த பட்சமாக 1,300 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது.அதே போல் ஏடிடி-45 நெல் ரகம் 1,230-1,070 ரூபாய், ஏடிடி-39 நெல் ரகம் 1,240-1750 மற்றும் ஏடிடி-37 ரகம் 1,180- 1100 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மக்காசோளம் 1,126-1024 ரூபாய், வரகு 1,065- 980 ரூபாய் விலை நிர்ணயம் செய்தனர்.நேற்று முன்தினம் (7ம் தேதி) கமிட்டிக்கு 2500 நெல் மூட்டைகள் மட்டுமே வந்தன. மக்காசோளம் 700 மூட்டைகள், வரகு 150 மூட்டைகள் வரத்து கொண்டு வரப்பட்டது. பொன்னி நெல் மூட்டை 1,391-1,200 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.அதே போல் ஏடிடி-45 நெல் ரகம் 1,089-989 ரூபாய், ஏடிடி-39 நெல் ரகம் 1,259-1150 மற்றும் ஏடிடி-37 ரகம் 1,179- 1,100

ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. மக்காசோளம் 1,179-989 ரூபாய், வரகு 970- 950 ரூபாய் விலை நிர்ணயம் செய்தனர்.இதே நாளில் 150 மூட்டை உளுந்து வரத்து இருந்தது. அதிகபட்சமாக 5,074 ரூபாய், குறைந்தபட்சமாக 3,640 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது.கமிட்டிக்கு நேற்று நெல் வரத்து 4000 மூட்டைகளாக அதிகரித்தது. பொன்னி நெல் மூட்டை 1,390-1,280 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

அதே போல் ஏடிடி-45 நெல் ரகம் 1,120- 1050 ரூபாய், ஏடிடி-39 நெல் ரகம் 1,239-1097 மற்றும் ஏடிடி-37 ரகம் 1,179- 1,047 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதே நேரத்தில் 200 மூட்டைகளாக உளுந்து வரத்து சற்று அதிகரித்தது. அதிகபட்சமாக 5,122 ரூபாய், குறைந்தபட்சமாக 4,689 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டது.கடந்த சில மாதங்களுக்கு முன், உளுந்து ஒரு மூட்டை 4 ஆயிரம் ரூபாயைவிட குறைத்து கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. தற்போது உளுந்து விலை உயர்ந்து, 5 ஆயிரம் ரூபாயைவிட கூடுதலாக கொள்முதல் செய்யப்படுவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## எள் சாகுபடி அமோகம்

விழுப்புரம்:விழுப்புரம் அருகே எள் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். மாவட்டத்தில் இந்தாண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை மிகவும் குறைவாக பெய்துள் ளது.இதனால் கிராமங்களில் நஞ்சை நிலங்களில் நெல் சாகுபடி செய்யமுடியவில்லை. இதனால் நன்கு உழுது தயார்படுத்தி வைத்திருந்த நிலத்தில், பல விவசாயிகள் எள் விதைப்பு செய்துள்ளனர்.மழை குறைவாக இருந் தாலும், பனி அதிகளவு பெய்து வருவதால், எள் செடிகள் நன்கு பூத்து, அதிக காய்கள் காய்த்துள்ளது. இதனால் எள் சாகுபடி செய்த விவசாயிகள் மகிழ்ச் சியடைந்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அவிநாசி கூட்டுறவு சங்கத்தில் 1.40 கோடிக்கு பருத்தி ஏலம்



அனுப்பர்பாளையம்: அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஒரு கோடியே 40 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. இந்த வாரம் நடந்த ஏலத்துக்கு 6,500 பருத்தி மூட்டைகள் வந்திருந்தன. இது சென்ற வாரத்தை விட 1,500 மூட்டை வரத்து அதிகரித்தது. மேலும் டி.சி.எச்.ரகப்பருத்தி குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை அதிகரித்தது. அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. ஏலத்தில், குவிண்டால் ஒன்றுக்கு டி.சி.எச்.ரகப்பருத்தி ரூ.6,900 முதல் ரூ.7,350 வரையிலும், பென்னி ஆர்.சி.எச்.சுரபி-பி.டி.ரகப் பருத்தி ரூ.4,850 முதல் ரூ.5,395 வரையிலும், மட்டரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,600 முதல் ரூ.3,000 வரையிலும் ஏலம் போனது.

இதன் மொத்த மதிப்பு ஒரு கோடியே 40 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் பருத்தி ஏலம் நடைபெற்றது. இது குறித்து அவிநாசி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் கூறுகையில், ஒரு கோடியே 40 லட்சத்து 7ஆயிரம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடைபெற்றது. சென்ற வாரத்தை விட பருத்தி 1,500 மூட்டைகள் வரத்து அதிகரித்து இரு மடங்காக குவிந்தது. டி.சி.எச்.ரகப்பருத்தி குவிண்டாலுக்கு ரூ.200 வரை விலை அதிகரித்துள்ளது. டிசம்பரிலிருந்து பருத்தி சீசன் துவங்கி அறுவடை செய்யப்படுகிறது. தற்போது விலை, பருத்தி வரத்து மேலும் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது என்றார்.

**விவசாயிகளுக்கு வேளாண் உபகரணங்கள்**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை வேளாண்மை விரிவாக்க மைய வளாகத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் மற்றும் துரிதப் படுத்தப்பட்ட பயிர் பெருக்கு திட்டத்தின்கீழ் 200 ஹெக்டேர் பரப்பளவிற்கான இடுபொருட்கள் மற்றும் வேளாண் உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குனர் கருணாநிதி தலைமை தாங்கினார். ஒன்றிய சேர்மன் பாலு, துணை சேர்மன் சாயிராம், பிடிஏ தலைவர் பழனிவேல், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் துரை, மணிராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விரிவாக்க அலுவலர் காமராஜ் வரவேற்றார். இதில் கூவாடு மற்றும் குஞ்சரம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் விசைத்தெளிப்பான், விளக்குப்பொறி, விதை உளுந்து உள்ளிட்டவைகளை குமரகுரு எம்எல்ஏ வழங்கி பேசினார்.   இதில் பிடிஏ தலைவர் ராமலிங்கம், துணைத் தலைவர் குணசேகரன், முன்னாள் அதிமுக மாவட்ட செயலாளர் ஜெயச்சந்திரன், அவைத் தலைவர் ராமசாமி, பேரூராட்சி துணைத் தலைவர் தாண்டவராயன், கவுன்சிலர்கள் குமார் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**வெங்காயம் கிலோ ரூ 20க்கு விற்பனை**

நாமகிரிப்பேட்டை, : நாமக்கல் மாவட்டம் நாமகிரிப்பேட்டை அடுத்த மெட்டாலாவில் தினசரி காய்கறி மார்க்கெட் நடக்கிறது. அதில் நேற்றைய காய்கறி விலை  விபரம்:

பெங்களூர் தக்காளி விலை கிலோ ரூ 5க்கும், நாட்டுத்தக்காளி ரூ 7, கத்தரிக்காய் கிலோ ரூ14 வரை விற்பனையானது. வெண்டை கிலோ ரூ 20, பச்சைமிளகாய் ரூ 16, அவரைக்காய் ரூ 30, பாவக்காய் ரூ 20, முள்ளங்கி ரூ 6, வெங்காயம் கிலோ ரூ 20, பீர்க்கங்காய் கிலோ ரூ 20, புடலை ரூ18, விற்பனையானது. பூசணி ரூ 7, நீர்பூசணி ரூ 5க்கும் விற்பனையானது. சுரைக்காய் கிலோ ரூ 5 க்கும் பீட்ரூட் ரூ 16க்கும் மாங்காய் ரூ 25, சீத்தாபழம் ரூ 15க்கும், வாழைப்பழம் கிலோ ரூ 35 க்கும் தேங்காய் ரூ 16 வரை விற்பனையானது. கடந்த 15 நாட்களில் வெங்காயம்விலை கிலோவிற்கு ரூ 10 வரை குறைந்துள்ளது. 15 நாட்களுக்கு முன் கிலோ ரூ 30 வரை விற்ற வெங்காயம் சில நாட்களாக கிலோ ரூ 20 வரை விற்றுவருகிறது.

**கண்ணமங்கலத்தில் நீரின்றி காயும் பயிர்கள் விவசாயிகள் கண்ணீர்**



கண்ணமங்கலம்: தண்ணீர் இல்லாததால் திருவண்ணாமலை மாவட்டம் கண்ணமங்கலத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. இந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், கண்ணமங்கலத்தில் நீரின்றி விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மின்சாரமும் இல்லாமல் விவசாயம் கேள்விக்குறியாகி போன நிலையில், வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல கோமாரி நோயால் கால்நடைகளும் இறந்து போய்விட்டன. பல ஏக்கர் மஞ்சள் பயிர்கள் அறுவடை நெருங்கி வரும் வேளையில் காய்ந்து விட்டதால், விவசாயிகளுக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ''இந்த மன நிலையில் நாங்கள் எப்படி பொங்கலை கொண்டாட முடியும்?'' என கண்ணமங்கலம் விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர் சரிவு**



மேட்டூர்: காவிரி டெல்டா பகுதிகளில் மழை பெய்வதால், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 6ம் தேதி வரை விநாடிக்கு 9 ஆயிரம் கனஅடியாக திறக்கப்பட்ட நீர், நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணி முதல் விநாடிக்கு 6 ஆயிரம்

கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் விநாடிக்கு 1060 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை 8 மணி நிலவரப்படி விநாடிக்கு 445 கனஅடியாக சரிந் தது. அணையின் நீர்மட் டம் 60.65 அடியாகவும், நீர் இருப்பு 25.17 டிஎம்சியாகவும் இருந்தது.

ராமேஸ்வரத்தில் 52.2 மி.மீ. மழை

**படகுகள் 2வது நாளாக கடலுக்கு செல்லவில்லை**



ராமேஸ்வரம்: ராமேஸ்வரம் கடல் பகுதியில் தொடர்ந்து பலத்த காற்று வீசுவதால் நேற்றும் படகுகள் கடலுக்கு செல்லவில்லை. வங்கக்கடலில் காற்றழுத்தத் தாழ்வுநிலை காரணமாக, ராமேஸ்வரம் கடற்பகுதியில் தொடர்ந்து பலத்த காற்று வீசுகிறது. இதனால், கடலுக்கு செல்ல மீனவர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், இரண்டாம் நாளாக நேற்றும் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை. ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதியில் படகுகள் அனைத்தும் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. புயல் எச்சரிக்கை விலக்கப்பட்டுள்ள நிலையில் ராமேஸ்வரம் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை முதல் தொடர்ந்து விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. நேற்று காலை 8 மணி வரையிலான கடந்த 24 மணிநேரத்தில் ராமேஸ்வரத்தில் 52.2 மி.மீ, பாம்பனில் 23.4 மி.மீ, தங்கச்சிமடத்தில் 23.9 மி.மீ மழை பெய்துள்ளது. தொடர் மழை காரணமாக ராமேஸ்வரம் பகுதியில் ஒரு சில பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

நேற்றுகாலை 8 மணிக்கு பின்னர் மழை ஓரளவு குறைந்தது. இதனால் மீனவர்கள் நாளை கடலுக்கு செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

உண்ணாவிரத போராட்டம் வாபஸ்: இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்கக்கோரி இன்று உண்ணாவிரத போராட்டம் நடைபெறும் என பாம்பன் மீனவர்கள் அறிவித்தனர். அதிகாரிகளின் நடவடிக்கையை தொடர்ந்து உண்ணாவிரத போராட்டத்தை வாபஸ் பெற்றுள்ளதாக நேற்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

**தென் மாவட்டங்களில் மழை பெய்யும்**




சென்னை: குறைந்த காற்றழுத்தம் மேற்கு நோக்கி நகர்ந்ததை அடுத்து இன்று தென் மாவட்டங்களில் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தென் கிழக்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை நேற்று முன்தினம் மன்னார் வளைகுடா அருகே வந்தது. அதனால் தமிழகத்தில் கடந்த இரண்டு நாட்களாக மழை பெய்து வந்தது. நேற்று அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 50 மிமீ மழை பெய்துள்ளது. மணிமுத்தாறு 40 மிமீ, கன்னியாகுமரி, வேதாரண்யம் 30 மிமீ, பாம்பன், நாகர்கோயில், நான்குனேரி, சிவகங்கை, ஒட்டப்பிடாரம், ஆர்.எஸ்.மங்கலம், பாபநாசம், ராதாபுரம், திருபுவனம், அம்பாசமுத்திரம், ஸ்ரீவைகுண்டம், பாளையங்கோட்டை 20 மிமீ, பரமக்குடி, முத்துப்பேட்டை, மானாமதுரை, திருத்துறைப்பூண்டி, அறந்தாங்கி, கொளச்சல், தூத்துக்குடி, மதுரை விமான நிலையம், திருச்செந்தூர், கோவில் பட்டி 10 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், மன்னார் வளைகுடா அருகே நிலை கொண்டு இருந்த காற்றழுத்த தாழ்வு நிலை வலுக்குறைந்து மேற்கு நோக்கி நகர்ந்து அரபிக்கடலுக்கு நகர்கிறது. இதனால் தென் மாவட்டங்களில் ராமநாதபுரம், கன்னியாகுமரி, மதுரை, தேனி, திருநெல்வேலி, சிவகங்கை, விருதுநகர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யும். வட மாவட்டங்களில் வறண்ட வானிலை நிலவும்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**டிசம்பர் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி இரு மடங்கு அதிகரிப்பு**



புதுடெல்லி

கடந்த டிசம்பர் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி அதற்கு முந்தைய மாதத்தை காட்டிலும் இரு மடங்கு அதிகரித்து 1.33 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. நவம்பர் மாதத்தில் இது 66,236 டன்னாக இருந்தது. மத்திய அரசு வெங்காயம் ஏற்றுமதிக்கான குறைந்த பட்ச விலையை குறைத்தன் காரணமாக வெங்காயம் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாக தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

<u>கடுமையான கட்டுப்பாடு</u>

பலத்த மழையால் சேதம் மற்றும் கையிருப்பு குறைந்ததால் வெங்காய வரத்து குறைந்தது. இதன் காரணமாக உள்நாட்டில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது. இதனையடுத்து மத்திய அரசு சப்ளையை அதிகரிக்கவும், விலை உயர்வு அதிகரிப்பை கட்டுப்படுத்தும் வகையிலும் வெங்காயம் ஏற்றுமதிக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது.

வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மூன்று முறை உயர்த்தி 1 டன்னுக்கு 1,150 டாலராக உயர்த்தியது. அதாவது இதற்கு குறைந்த விலையில் வெங்காயம் ஏற்றுமதி செய்ய முடியாது. இதன் காரணமாக தொடர்ந்து மூன்று மாதமாக ஏற்றுமதி குறைந்துள்ளது. ஏப்ரல் முதல் டிசம்பர் வரையிலான காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி 30 சதவீதம் குறைந்து 9.87 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. சென்ற ஆண்டின் இதே காலத்தில இது 14.04 லட்சம் டன்னாக இருந்தது.

இதன் காரணமாக உள்நாட்டில் வெங்காயம் விலை குறைய தொடங்கியது. மேலும் டிசம்பர் மாதம் கரீப் பருவத்தில் சாகுபடி செய்த வெங்காயம் சந்தைக்கு வரத்தொடங்கியது. இதனால் வெங்காய விலை உள்நாட்டில் மிகவும் குறைந்தது. சந்தையில் விலை குறைந்ததால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டனர்.

விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டும், ஏற்றுமதியைஅதிகரிக்கும் வகையிலும் ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான குறைந்த பட்ச விலையை சென்ற மாதம் 19–ந் தேதி முதல் படிப்படியாக மூன்று முறை தளர்த்தி 1 டன்னுக்கு 150 டாலராக குறைத்துள்ளது. இதன்காரணமாக டிசம்பர் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி நவம்பர் மாதத்தை காட்டிலும் அதிகரித்துள்ளது.

**டன் ஒன்றுக்கு ரூ.4ஆயிரம் கேட்டு கரும்பு விவசாயிகள் காதில் பூ சுற்றி ஆர்ப்பாட்டம்**

திருப்புவனம்,

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4ஆயிரம் கேட்டு கரும்பு விவசாயிகள் திருப்பாசேத்தியில் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

<u>காதில் பூ சுற்றி போராட்டம்</u>

சிவகங்கை மாவட்டம் திருப்பாச்சேத்தியில் கரும்பு விவசாயிகள் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட செயலாளர் சக்திவேல் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தை விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் தண்டியப்பன் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட செயலாளர் வீரபாண்டி சிறப்புரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் பாண்டி, முத்தையா, நீலமேகம், ராமு உள்பட பலர் கலந்து கொண்டனர். இதில் பங்கேற்றவர்கள் காதில் பூ சுற்றி இருந்தனர். ஆர்ப்பாட்டத்தில், மத்திய, மாநில அரசுகள் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும். சக்தி சர்க்கரை ஆலை நிர்வாகம் விவசாயிகளிடம் வங்கி கடன்களுக்காக பிடித்த ரூ.40கோடியை வங்கியில் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து ஆலைகளிலும் எத்தனால் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். வறட்சியால் பாதித்த கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 500 வழங்க வேண்டும். அனைத்து விவசாய பாசன கிணறுகளுக்கு மின் இணைப்பு உடனடியாக வழங்க வேண்டும். ஆழ்குழாய் கிணறு அமைக்க விவசாயிகளுக்கு மானியத்துடன் கடனுதவி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

**புயல்சின்னம், தொடர் மழையால் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை**



பனைக்குளம்,

புயல்சின்னம், தொடர் மழையால் மீன்பிடி டோக்கன் வழங்கப்படவில்லை. இதனால் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை. கடலோர பகுதியில் வசித்தவர்கள் பாதுகாப்பான பகுதிக்கு சென்றனர்.

<u>தொடர்மழை</u>

வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயல் சின்னமாக மாறிஉள்ளது. இதன்காரணமாக ராமநாதபுரம் மாவட்டத்தில் தொடர்ந்து மழைபெய்துவருகிறது. காற்றின் வேகமும் அதிகமாக உள்ளது. மாவட்டம் முழுவதும் 3 நாட்களாக மழை பெய்துவருகிறது. மீனவர்களுக்கு புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்டபம் பகுதியில் மீனவர்கள் வாரத்தில் 2 நாட்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்வது வழக்கம். புயல் எச்சரிக்கை காரணமாக அவர்களுக்கு மீன்துறை அலுவலகத்தில் மீன்பிடி டோக்கன் வழங்கப்படவில்லை.

இதனால் மண்டபத்தை சேர்ந்த சுமார் 1,077 விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை. மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் மண்டபம் கடற்பகுதியில் நாட்டுப்படகு, விசைப்படகுகள் நிறுத்தப்பட்டு கடற்கரை வெறிச்சோடி காணப்படுகிறது.

<u>பாதிப்பு</u>

மீன்பிடி பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் கடலில் அலைகளின் வேகம் அதிகமாக இருந்ததால் கடற்கரையில் குடிசை அமைத்து வசித்து வந்த மீனவர்கள் பாதுகாப்பான பகுதிக்கு சென்றனர்.

நாட்டுப்படகு, கைவலை மூலம் மீன்பிடிப்பவர்கள், கனவாய் பிடிக்கும் மீனவர்கள் அலைகளின் வேகம் காரணமாக கடலுக்கு செல்லவில்லை. தொடர்மழையால் கட்டுமான தொழிலாளர்கள், மீன், பால், காய்கறி வியாபாரிகள் பாதிக்கப்பட்டனர்.

**ராயக்கோட்டையில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி கிலோ ரூ.2-க்கு விற்பனை**



ராயக்கோட்டை,

ராயக்கோட்டையில் தக்காளி விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. கிலோ ரூ.2-க்கு விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>தக்காளி மார்க்கெட்</u>

கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டை மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் விவசாயி கள் பெருமளவில் வசித்து வரு கிறார்கள். இவர்களில் பலர் தக்காளி பயிரிட்டு வருகிறார் கள். ராயக்கோட்டை சுற்று வட்டார பகுதிகளில் தக்காளி அதிக அளவில் விளைச்சல் ஆவதால், தமிழகத்திலேயே பெரிய தக்காளி மார்க்கெட் ராயக்கோட்டையில் உள் ளது.

இந்த மார்க்கெட்டிற்கு வெளி மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகளும், அரு கில் உள்ள கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களை சேர்ந்த வியா பாரிகளும் வந்து

தக்காளியை மொத்தமாக வாங்கி செல் கிறார்கள். கடந்த மாதம் வரை தக்காளி விலை அதிகமாக இருந்தது.

<u>கிலோ ரூ.2-க்கு விற்பனை</u>

20 கிலோ எடை கொண்ட தக்காளி பெட்டி ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இது படிப் படியாக குறைந்து தற்போது தக்காளி விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. 20 கிலோ எடை கொண்ட தக்காளி பெட்டி நேற்று ரூ.50 முதல் ரூ.80 வரை விற்பனை ஆனது.

சில்லறையாக தக்காளி கிலோ ரூ.2-க்கு விற்பனை செய்யப்பட்டது. ராயக் கோட்டை சுற்று வட்டார பகுதிகளில் தக்காளி விலை இந்த அளவு வீழ்ச்சியை சந்தித் ததில்லை என்று விவசாயிகள் பலரும் வேதனையுடன் கூறி னார்கள்.

இது குறித்து விவசாயி திம்ம ராயப்பா கூறியதாவது:-

<u>பறிக்கும் கூலி கிடைப்பதில்லை</u>

ராயக்கோட்டை பகுதியில் தக்காளி அதிக அளவில் விளைச்சல் ஆகிறது. தற்போது விலை கடுமையான வீழ்ச்சியை சந்தித்துள்ளது. கிலோ ரூ.2-க்கு விற்கப்படுவதால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம்.

தக்காளியை பறிப்பதற்காக கொடுக்கும் கூலி கூட கிடைப்பதில்லை. இதனால் பல இடங்களில் தக்காளியை பறிக்காமல் அப்படியே விட் டுள்ளார்கள். ராயக்கோட்டை சுற்று வட்டாரத்தில் தக்காளி அதிக அளவில் விளைச்சல் ஆகிறது. மேலும் வெளி இடங் களிலும் தக்காளி விளைச்சல் தற்போது அதிகமாக உள்ளது. இதனால் வெளி மார்க்கெட்டு களுக்கு அந்த தக்காளி செல் கிறது. இதன் காரணமாக விலை வீழ்ச்சி அடைந்துள் ளது.

இவ்வாறு விவசாயி திம்மராயப்பா கூறினார்.

**குன்னூரில் கடந்த ஆண்டு 14 மில்லியன் கிலோ பச்சை தேயிலை அறுவடை**

**உபாசி தேயிலை அதிகாரி தகவல்**



குன்னூர்,

குன்னூரில் கடந்தஆண்டு 14.06 மில்லியன் கிலோ கிராம் பச்சை தேயிலை அறுவடைசெய்யப்பட்டு உள்ளதாக உபாசி தேயிலை ஆராய்ச்சிஅதி காரி தெரிவித்து உள் ளார்.

<u>வடகிழக்கு பருவமழை</u>

நீலகிரி மாவட்டத்தில் கூட லூர், பந்தலூர், ஊட்டி ஆகிய தாலுகாக்களில் ஜூன், ஜூலை மாதங்களில் தென் மேற்கு பருவமழை அதிகளவு பெய்து வருகிறது. குன்னூர் பகுதியில் தென் மேற்கு பருவ மழை குறைந்த அளவே பெய் கிறது.ஒரு சில ஆண்டுகளில் குன் னூர் பகுதிகளில் தென் மேற்கு பருவமழை பெய்யாமலேயே பொய்த்து விடுகிறது. அதனால் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவமழையே நம்பியே குன்னூர் மக்கள் உள்ளனர்.

இந்த நிலையில், கடந்த 2 ஆண்டுகளாக குன்னூர் மற் றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை குறைந்த அளவே பெய்து வருகிறது. இதன் காரணமாக நீர் நிலைகளில் தண்ணீர் குறைந்து குடிநீர் பிரச்சினை ஏற்பட்டு வந்தது.

இந்த ஆண்டு குன்னூர் பகுதியில் வடகிழக்கு பருவ மழை சராசரி அளவிற்கும் அதிகமாக பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் வடகிழக்கு பருவ மழை குறைவாகவே பெய்தது.இதன் காரணமாக கடந்த 2012–ம் ஆண்டை விட 2013–ம் ஆண்டில் குறைவான மழை அளவே பதிவானது.

இது குறித்து உபாசி தேயிலை ஆராய்ச்சி மண்டல மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:– கடந்த 2012–ம் ஆண்டை விட 2013–ம் ஆண்டு பருவ மழை குறைவாகவே பெய்து உள்ளது. கடந்த 2012–ம் ஆண்டில் 147 செ.மீ. மழை பெய்தது. 2013–ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை 137 செ.மீ. மட்டுமே மழை பெய்து உள்ளது. இதனை வைத்து பார்க்கும் போது 2012–ம் ஆண்டைவிட 2013–ம் ஆண்டில் 10 செ.மீ. மழை குன்னூர் பகுதியில் குறைவாக பெய்து உள்ளது.

தேயிலை மகசூல் அதிகரிப்பு

பச்சை தேயிலை மகசூலை பொறுத்தவரை 2013–ம் ஆண்டில் அதிக மகசூல் கிடைத்து உள்ளது. இதற்கு காரணம் தேயிலைக்கு ஏற்ற சூழல் கிடைத்ததால் மகசூல் அதிகரித்து உள்ளது. 2012 ஜனவரி முதல் டிசம்பர் வரை 13.01 மில்லியன் கிலோ கிராம் பச்சை தேயிலை அறுவடை செய்யப்பட்டு உள்ளது.

2013–ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை 14.06 மில்லியன் கிலோ கிராம் பச்சை தேயிலை அறுவடை செய்யப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இயற்கை விவசாயத்தில் துளிர்க்கும் திராட்சைக் கொடிகள்



இன்று செயற்கை உரங்களும் பூச்சிக்கொல்லிகளும் இல்லாமல் விவசாயம் செய்வது மிகக் குறைவான அளவிலேயே நடைபெற்றுவருகிறது. சூழல் மாசுபாட்டால் வளமிழந்து நிற்கும் மண்ணில் இருந்து, நல்ல மகசூலைப் பெறுவதற்கு இதைத் தவிர வேறு வழியில்லை என்பதுதான் பெரும்பாலான விவசாயிகளின் பதிலாக இருக்கிறது. ஆனால், இயற்கை முறையில் திராட்சை சாகுபடியைச் சவாலாக எடுத்துக்கொண்டு செய்து வருகிறார் தேனி மாவட்டம் கம்பத்தை அடுத்த கே.கே.பட்டியை (கம்ய கொண்டான் பட்டி) சேர்ந்த ராஜ்குமார்.

அதுவும் திராட்சையைப் பொறுத்தவரை பயிரிடுவதில் தொடங்கி, அறுவடை வரை ரசாயனப் பூச்சிக்கொல்லிகள், உரங்களின் துணை அதிகம் தேவைப்படுகிறது. இதற்குக் காரணம், மற்ற பயிர்களைவிட இதற்கு நேரக்கூடிய நோய்த்தொற்றும் பூச்சித் தாக்குதலும் அதிகம்.

ஐந்தரை ஏக்கர் கொண்ட திராட்சைத் தோட்டத்தை, இயற்கை விவசாயத்துக்கான ஆராய்ச்சிக் களமாக இவர் மாற்றியிருக்கிறார். ஆரம்பத்தில் நிறைய தோல்விகளையும் நஷ்டத்தையும் சந்தித்திருக்கிறார். வேளாண் விஞ்ஞானி

நம்மாழ்வாரின் வழிகாட்டுதலின்படி திராட்சைத் தோட்டத்துக்கான இயற்கை உரத்தையும், பூச்சிக்கொல்லியையும் இவரே தயாரிக்கிறார்.

இருந்தாலும் தொடர்ந்து நூறு சதவீதம் இயற்கையையே நம்பியிருக்க முடியவில்லை என்பதை வருத்தத்துடன் பகிர்ந்துகொள்கிறார் ராஜ்குமார்.

"இந்த உலகத்துக்கே படியளக்கும் மண்ணை மலடாக்கிவிட்டு, அடுத்த வேளை உணவைத் தேடி எங்கே போகப் போகிறோம்? கட்டடங்களை இடித்தா பயிர் செய்ய முடியும்? அதனால்தான் நம்மால் முடிந்த அளவுக்கு மண்ணின் வளத்தைப் பாதுகாக்க முடிவு செய்தேன். அதற்கு மறைந்த நம்மாழ்வார் ஐயாவும் வழிகாட்டினார். முதல் கட்டமாக, திராட்சையை முழுக்க முழுக்க இயற்கை முறையிலேயே பயிரிட முடிவு செய்தேன். ஆனால் எதிர்பார்த்த அளவு மகசூல் கிடைக்கவில்லை. பூச்சிகளும் அதிகமாகத் தாக்கின" என்கிற ராஜ்குமார், தோல்விக்குப் பின்னும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. அடுத்தடுத்துப் பிரச்சினைகள் தலைதூக்கியபோதும், இயற்கை விவசாயம் என்கிற கொள்கையில் உறுதியாக நின்றிருக்கிறார்.

## நூறு சதவீதமே இலக்கு

"என் நிலத்தில் எப்படிப் பயிர் செய்வது என்பதைப் பற்றி மட்டும்தான் நான் முடிவு செய்ய முடியும். அதில் நானே வெற்றியைத் தொடாதபோது அடுத்தவர்களையும் என்னைப் போலவே சோதனை முயற்சியில் இறங்கச் சொல்ல முடியுமா? சுற்றியிருக்கும் வயல்களில் பூச்சி மருந்து அடித்தால், அங்கிருக்கும் பூச்சிகள் எல்லாம் என் திராட்சைத் தோட்டத்துக்குள் புகுந்துவிடுவது இயல்புதானே. அளவுக்கு அதிகமான பூச்சிகளை, இயற்கை பூச்சிக்கொல்லிகளால் முழுவதுமாகக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதனால் குறைந்த அளவு செயற்கை பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டிய சூழ்நிலை. அதுவும் கொடிகளுக்கு மட்டும்தான். மண்ணுக்குள் எந்த ரசாயனத்தையும் நான் அனுமதிப்பது இல்லை. கொடிகளுக்கு அடிக்கிற ரசாயனப் பூச்சிக்கொல்லிகளையும் முழுவதுமாக

நிறுத்துவதற்காகத் தொடர்ந்து பரிசோதனை முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம்" என்கிறார் ராஜ்குமார்.

தோற்றுப் போய்விடுவோமோ என்கிற பயம்தான் ஆரோக்கிய மான முயற்சிகளைக்கூட முடக்கிப்போட்டுவிடும். ஆனால் ராஜ்குமார் போன்றவர்கள்தான் அந்த முட்டுக்கட்டைகளையும் தங்கள் முயற்சிக்கான ஏணியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அந்த நம்பிக்கையே இந்த மண்ணை உயிர்ப்புடன் வைத்திருக்கிறது.